விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 329 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 27 திங்கட்கிழமை (13.11.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## கடன்களைத் தந்து எம்மை நசுக்குவதே மேற்கத்தேய நாடுகளின் திட்டம்

### முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா



(கொழும்பு)

கடன் வழங்கி எம்மை நசுக்கி இந்து சமூத்திரத்தின் மூலோபாய நன்மைகளை பெற்றுக் கொள்ளவே மேற்கத்தேய நாடுகள் முயற்சிக்கின்றன.

கடன்கள்மூலம்அபிவிருத்தி செய்யச் சந்தர்ப்பம் கிடைத்தாலும் அவ்வாறான ஒன்று தேவையில்லை. இதுவும் பொருளாதார வங்குரோத்து நிலைக்கு 15

## பாராளுமன்றில் இன்று வ.செ.திட்டம் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட அறிக்கை இன்று திங்கட்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

முன்னதாக வரவு - செலவுத்திட்டத்தின் இறுதிக்கட்ட தயாரிப்பு மற்றும் சமர்ப்பிப்பு தொடர்பாக தனது உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் ஜனாதிபதி கலந்து கொண்டார்.

இக்கலந்துரை 15

## அரசியல் தீர்வைத் தராவிட்டால்

# சர்வதேசத்துடன் இணைந்து களமிறங்குவேன்

## அதட்டுகிறார் இரா.சம்பந்தன்



(கொழும்பு)

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை வழங்காவிடின் சர்வதேசத்துடன் இணைந்து தீர்வைப் பெற்றுக் கொள்ள களமிறங்கப் போவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார். (16ஆம் பக்கம் பார்க்க)

## சம்பந்தரின் ஏமாற்றுக் கருத்துக்கள்; த.தே.ம.முன்னணி கடும் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை வழங்காவிடின் சர்வதேசத்துடன் இணைந்து தீர்வைப் பெற்றுக்கொள்ள களமிறங்கப் போவதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் வெளியிட்ட கருத்தை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கடுமையாக விமர்சித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த 2016ஆம் ஆண்டு பிரதமராக இருந்த போது அலரி மாளிகையில் இடம்பெற்ற தேசிய தீபாவளி கொண்டாட்டங்களில் பங்கேற்ற இரா.சம்பந்தன், அடுத்த தீபாவளிக்குள் தமிழ் மக்களுக்கு தீர்வு கிடைக்கும் எனக் கூறி, இன்றுடன் ஏழு ஆண்டுகள் கடந்துள்ளன.

எனினும் அன்று பிரதமராக இருந்த ரணில் 15

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் அடுத்த வருட முற்பகுதியில்

### நீதி அமைச்சர் விஜயதாஸ உறுதி

(கொழும்பு)

அடுத்த ஆண்டின் முற்பகுதியில் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தின் அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் இதனை தெரி 15

## வட மாகாண மக்களின் குடிநீர் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நதி நீர் திட்டத்தின் ஊடாக வட மாகாண மக்களின் குடிநீர் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காண்பது தொடர்பில் கலந்துரையாடப் படுவதாக பிரதமர் 16

## ஜனாதிபதியால் ஒரு டொலரைக்கூட நாட்டுக்குப் பெற்றுத்தர முடியவில்லை

### எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு



(கொழும்பு)

நல்ல மூளைசாலி. சிறந்த சர்வதேச தொடர்புடையவர் என நம்பி நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் ஒரு டொலரைக் கூட நாட்டுக்கு மேலதிகமாகக் கொண்டுவர முடியவில்லை.

சகல பொருட்களும் கடனாகவும் மனிதாபிமான உதவிகளாகவும் மட்டுமே நாட்டுக்கு கிடைத்தன என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் மேலும்கருத்துரைத்த 15

## வாகன விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

### கெற்பேலியில் துயரம்

(கொடிகாமம்)

தீபாவளி தினமான நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கெற்பேலி-கச்சாய் வீதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.


மோட்டார் சைக் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறாது நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 1967 . 11 . 07



ஆண்டவன் அடியில் 2022 . 10 . 25

## அமரர் சின்னத்துரை நேசராசா

( பொது முகாமையாளர் கட்டைவேலி – நெல்லியடி ப.நோ.கூ. சங்கம் )

திதி : ஐப்பசி அமாவாசை - 13.11.2023

எங்கு சென்றீர் அப்பா!
"உடையவன் இல்லாவிட்டால் ஒருமுழம் கட்டை"
உணர்ந்தோம் அப்பா!
அன்பு பாராட்டி அரும்பாடுபட்டு
ஆசையாய் வளர்த்து ஆளாக்கி
இல்லறம் புகுத்தி – இடையில்
ஈற்றைக் காணாமல் சென்றதேனோ
உங்கள் ஆசிகள்
ஊக்கமாய் மனதிலிருக்க
தொடர்கிறோம் வழியை
உங்கள் நினைவுகளுடன்

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

கரவெட்டி மேற்கு,
கரவெட்டி.

(C -7624)

குடும்பத்தினர்

---

செவிப்பறை பாதிப்புறும் வகையில்

# மாணவனைத் தாக்கிய சக மாணவர்கள் நால்வர் கைது

(யாழ்ப்பாணம்)

மாணவனின் செவிப் பறை பாதிக் கப்படும் வகையில் தாக்கிய சக மாண வர்கள் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் நகரில் உள்ள தேசிய பாடசாலை ஒன்றில் கல்வி பயிலும் 13 வயதுடைய மாணவனே இவ்வாறு தாக்கப்பட்டார். அவரது செவிப்பறை பாதிக் கப்பட்டுள்ளதாக மருத்துவ அறிக்கையிடப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதியப்பட்டதன் அடிப்படையில் பொலிஸ் புலனாய்வு பிரிவினர் முன்னெடுத்த விசாரணையில் நேற்று முன்தினம் மாணவன் ஒருவர் கைது செய்யப்பட்டிருந்தார்.


அவரது வாக்குமூலம் பெறப்பட்ட நிலையில் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவரை சிறுவர் சீர்திருத்த பாடசாலையில் தங்க வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

அந்த மாணவனின் வாக்குமூலத்தின் அடிப்படையில் மேலும் மூன்று மாணவர்கள் நேற்று கைது செய்யப்பட்டனர் அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர். (ந-7.33)

---

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது பாடசாலையின் கணித பாட ஆசிரியர்



(17843)

## திரு.சிவானந்தன் வித்தகன்

BED,NDT(maths),
S.L.P.S III

அவர்கள் 04.11.2023 அன்று
தரம் III அதிபராக பதவியுயர்வு
பெற்றுள்ளதையிட்டு அவரை
மனதாரப் பாராட்டுவதுடன்
அவரின் பணி மென்மேலும்
சிறப்படைய வாழ்த்துகின்றோம்.

Best Wishes!

அதிபர், ஆசிரியர்கள்
யா/சில்லாலை
றோ.க.த.க பாடசாலை

---

# மரண அறிவித்தல்

தோற்றம் 1942 . 02 . 11



மறைவு 2023 . 11 . 12

## தெட்சணாமூர்த்தி சத்தியபாமா

யாழ்.கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட தெட்சணாமூர்த்தி சத்தியபாமா அவர்கள் 12.11.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - மூத்தபிள்ளை தம்பதியினரின் புதல்வியும் சின்னத்தம்பி தெட்சணாமூர்த்தி அவர்களின் பாசமிகு மனைவியும் கனகாம்பிகை, சத்தியமூர்த்தி, சச்சிதானந்தமூர்த்தி (இலங்கை போக்குவரத்துச் சபை -கோண்டாவில்) ஆகியோரின் அன்புத் தாயும் ஜெகராசா, ஜீவமலர், சிவரஞ்சினி ஆகியோரின் மாமியாரும் ராம்சங்கர், ஹரிசங்கர், பிரவீனா, ஜெயஆரணி, சங்கீர்த்தனன், சயித்தனன், திருஜன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 13.11.2023 இன்று காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் கட்டையாலடி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*தகவல்:*
குடும்பத்தினர்
077 806 0253

(C-7622)

---

# ஓராண்டு நினைவஞ்சலி

பிறப்பு 1929 - 02 - 24



இறப்பு 2022 - 10 - 26

கடந்த வருடம் 26.10.2022 அன்று
இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவி

## அமரர் மயில்வாகனம் தர்மநாயகி

அவர்களின் ஓராண்டு நினைவஞ்சலிப் பிரார்த்தனையும் மதியபோசன நிகழ்வும் அன்னாரின் இல்லத்தில் நாளை (14.11.2023) செவ்வாய்க்கிழமை நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஓராண்டானாலும் உங்கள் பாசம் எங்களை விட்டுப் பிரியாது

(17851)


இல.297,
ஜெயந்தி நகர்,

இங்ஙனம்:- பிள்ளைகள், மருமக்கள்,
மருமகன்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள் தொ.பே: 077 987 1427

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







தீபாவளியை முன்னிட்டு பல்வேறு பகுதிகளிலும் உள்ள ஆலயங்களில் நேற்று விசேட பூஜைகள் நடைபெற்றன.

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லைக்கந்தன் ஆலயம், தொண்டமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயம், திருக்கேதீச்சரம் ஆகியவற்றில் தீபாவளி விசேட பூஜைகள் நடைபெற்றன. தீபத்திருநாளை மக்கள் மகிழ்வுடன் கொண்டாடியதுடன் ஆலயங்கள் தோறும் பூஜை வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. இந்த விசேட பூஜைகளில் அதிகளவான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

(படங்கள்- சிவசாந்தன, ஜோசப்நயன்)

# மாஃபியாக்களின் செயற்பாடுகளால் கீரிச்சம்பாவுக்கு சந்தையில் தட்டுப்பாடு

## விவசாய அமைச்சு தெரிவிப்பு



(கொழும்பு)

அரிசி மாஃபியாக்களின் செய ற்பாடுகளே சந்தையில் கீரிச் சம்பாவுக்கான தட்டுப்பாட்டுக்கான காரணம் என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

தேவையான அளவு கீரிச்சம்பா தொகை கையிருப்பில் உள்ள போதிலும் அரிசி ஆலை உரிமையாளர்கள் அதனை சந்தைக்கு வழங்குவதற்கு தயக்கம் காட்டுவதாக அந்த திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிகக்கப்பட்டுள்ளது.

கடந்த சிறுபோகத்தில் கீரிச் சம்பா அறுவடை குறைவடைந்திருந்தாலும் அதற்கு முன்னதாக பெரும் போகத்தில் செய்ய ப்பட்ட அறுவடையில், கீரிச்சம்பா கையிருப்பு தற்போதைய காலத்திற்கும் போதுமானதாக காண ப்பட்டதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. (நி-6)

# சவாலான வரவு-செலவுத்திட்டம்

## பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டு

**(கொழும்பு)**

**வரலாற்றில் மிகவும் சவாலான வரவு - செலவுத் திட்டமாக இந்த வரவு - செலவுத் திட்டம் அமையும் என பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.**

அத்துடன், வழமையான வரவு-செலவுத் திட்டத்திற்கு மாறாக ஆக்கபூர்வமான கொள்கைகளை முன்வைத்தால் மாத்திரமே மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும் என தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிதி அமைச்சர் என்ற வகையில் இன்று பாராளுமன்றத்தில் 2024 ஆம் ஆண்டுக்கான அரசாங்க செலவினங்கள் உட்பட வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பை சமர்ப்பிக்க உள்ளார்.

2024ஆம் ஆண்டுக்கான அரசாங்க ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தின்படி, அரசாங்கத்தின் மதிப்பிடப்பட்ட செலவு 3,860 பில்லியன் ரூபாவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், 2023ஆம் ஆண்டு அரசாங்க ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின்படி செலவினம் 3,657 பில்லியன் ரூபாவாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, கடந்த வருடத்து டன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டிற்கான உத்தேச செலவு 203 பில்லியன் ரூபாவால் அதிகரித்துள்ளது எனலாம். (நி-6)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது பாடசாலையின் ஆசிரியை
திருமதி. திவ்வியா கிருஸ்ணகுமார்
அவர்கள் இலங்கை அதிபர் சேவை தரம் III
பதவியினைப் பெற்றுக் கொண்டமையினை
இட்டு எமது பாடசாலையின் நலன்புரிக்கழகம்
சார்பாக அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.



Best Wishes

(சி-7620)

வாழ்த்துவோர்
யா/கைதடி நாவற்குழி அ.த.க பாடசாலைச் சமூகம்

# ரணில் அரசை விரட்ட அனைவரும் அணி திரள்வோம்

## அநுரகுமார அழைப்பு

(கொழும்பு)

"ரணில் - ராஜபக்ஷ அரசு இனியும் ஆட்சியில் தொடர மக்கள் அனுமதிக்கக் கூடாது. இந்த அரசை விரட்டியடிக்க மக்கள் அனைவரும் தேசிய மக்கள் சக்தியின் பின்னால் அணிதிரள வேண்டும் என தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ராஜபக்ஷக்களை பாதுகாக்கும் நோக்குடன் ஜனாதிபதி ஆசனத்தில் அமர்ந்த ரணில் விக்கிரமசிங்க இன்று செய்வதறியாது திக்குமுக்காடுகின்றார்.

அரசியலிலும் விளையாட்டிலும் ஊழல். மோசடியாளர்களை பாதுகாக்க முற்படும் ரணில், தானும் ஒரு ஊழல், மோசடியாளன் என்பதை மறந்து விட்டார்.

ரணில் - ராஜபக்ஷ அரசை விரட்டியடிக்க அனைத்து மக்களும் தேசிய மக்கள் சக்தியின் பின்னால் அணிதிரள வேண்டும்" என தெரிவித்துள்ளார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






## ஸ்ரேயாஸ் 'பட்டாஸ்' ராகுல் 'பேடாஸ்'

# 'தீபாவளி' இந்தியா 'ஜாலி'

ஸ்ரேயாஸின் அதிரடியான துடுப்பாட்டம் "பட்டாஸ்" ஆக வெடிக்க, ராகுலின் இரக்கமற்ற (பேடாஸ்) துடுப்பாட்டமும் இணை சேர, தீபத் திருநாளில் இந்திய அணி 160 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நெதர்லாந்தை வீழ்த்தியது. இதன்மூலம் தொடர்ச்சியாக 9வது வெற்றியை பதிவு செய்து அசத்தியது.

இந்தியாவில் 13ஆவது உலகக் கிண்ணத் தொடர் நடக்கிறது. நேற்று நடந்த தொடரின் கடைசி லீக் போட்டியில் இந்தியா, நெதர்லாந்து அணிகள் மோதின. அசராத வெற்றிநடையுடன் அரையிறுதிக்கு முன்னேறிய உற்சாகத்தில் இந்தியா களமிறங்கியது. நெதர்லாந்து அணி ஏற்கெனவே அரையிறுதி வாய்ப்பை இழந்தது. இரு அணிகளிலும் மாற்றம் செய்யப்படவில்லை.

**நல்ல ஆரம்பம்**

நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு அணித் தலைவர் ரோகித், சுப்மன் கலக்கல் ஆரம்பம் கொடுத்தனர்.

இருவரும் நெதர்லாந்து பந்துவீச்சை சிதறடித்தனர். சுப்மன் 30 பந்துகளில் அரைசதம் அடித்தார். முதல் விக்கெட்டுக்காக 100 ஓட்டங்கள் சேர்த்த நிலையில், சுப்மன் (51) வெளியேறினார். ரோகித் சர்மாவும் (61) அரைசதம் கடந்தார். ஹோலி பொறுப்பாக ஆடினார். இவர் அரைச்சதம் எட்டிய போது, ரசிகர்கள் உற்சாக கோஷம் எழுப்பினர். 50ஆவது சதம் அடித்து சாதிப்பார் என எதிர்பார்த்தனர். ஆனால், மெர்வி பந்தில் 51 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து அரிய வாய்ப்பை நழுவவிட்டார்.

இதற்கு பின் ஸ்ரேயாஸ், லோகேஷ் ராகுல் சேர்ந்து மிரட்டினர். நான்காவது விக்கெட்டுக்காக 208 ஓட்டங்கள் சேர்த்தனர். இவர்கள் இரக்கம் இல்லாமல் அடித்து நொருக்க-, நெதர்லாந்து பந்துவீச்சாளர்கள் பரிதவித்தனர். சிக்சர்களும், பவுண்டரிகளும் சாதாரணமாக பறந்தன. லீட் பந்தை ஒரு ஓட்டத்துக்கு தட்டிவிட்ட ஸ்ரேயாஸ் முதலில் சதம் எட்டினார். இவர், வான் பீக் வீசிய 49ஆவது ஓவரில் 3 சிக்ஸர், 1 பவுண்டரி அடிக்க, மொத்தம் 25 ரன் எடுக்கப்பட்டன. லீட் வீசிய கடைசி ஓவரில் இரண்டு சிக்சர் விளாசிய ராகுல் அதிவேக சதம் அடித்தார். கடைசி 10 ஓவர்களில் 122 ஓட்டங்கள் எடுக்கப்பட்டன. ராகுல் 102 ஓட்டங்களுடன் (11 பவுண் டரிகள், 4 சிக்ஸர்) ஆட்டமிழந்தார்.

இந்திய அணி 50 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 410 ஓட்டங்களைக் குவித்தது.

ஸ்ரேயாஸ் (128 ஓட்., 10 பவுண்டரி, 5 சிக்ஸர்), சூர்யகுமார்(2) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.



**ஹோலிக்கு விக்கெட்**

கடின இலக்கை விரட்டிய நெதர்லாந்து அணி 47.5 ஓவர்களில் 250 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து தோல்வியடைந்தது.

நெதர்லாந்து சார்பில் தேஜா நிடமனுரு 54 ஓட்டங்கள் எடுத்தார். இந்தியா சார்பில் பந்துவீசிய பும்ரா, சிராஜ், குல்தீப், ஜடேஜா ஆகியோர் 2 விக்கெட்டுக்களையும் ஹோலி, ரோகித் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். ஆட்டநாயகன் விருதை இந்தியாவின் ஸ்ரேயாஸ் வென்றார். (7)




# பட்லர் மீண்டும் 'கப்டன்'

## இங்கிலாந்து அணி அறிவிப்பு




மே.தீவுகளுக்கு எதிரான ஒருநாள், 'ரி20' தொடரில் பங்கேற்கும் இங்கிலாந்து அணிக்கு பட்லர் மீண்டும் அணித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மே.தீவுகள் செல்லவுள்ள இங்கிலாந்து அணி, மூன்று ஒருநாள் (டிச. 3, 6, 9), ஐந்து 'ரி20' (டிச. 12, 14, 16, 19, 21) போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது.

இதற்கான இங்கிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் நடக்கும் உலகக் கிண்ணத் தொடரில் 'நடப்பு சம்பியன்' அந்தஸ்துடன் களமிறங்கிய இங்கிலாந்து, 9 லீக் போட்டிகளில் 3ல் மட்டும் வெற்றி பெற்று அரையிறுதி வாய்ப்பை இழந்து வெளியேறியது.

இத்தொடரில் பங்கேற்ற அணித் தலைவர் பட்லர், அட்கின்சன், ஹாரி புரூக், பிரைடன் கார்ஸ், சாம் கர்ரான், லியாம் லிவிங்ஸ்டன் என 6 வீரர்கள் ஒருநாள் தொடருக்கு தேர்வாகினர்.

முழங்காலில் 'ஆப்பரேஷன்' செய்யவுள்ள பென் ஸ்ரோக்ஸ் இடம் பெறவில்லை. மொயீன் அலி, அடில் ரஷித், கிறிஸ் வோக்ஸ், ரீஸ் டாப்லே ஆகியோர் 'ரி20' அணிக்கு மட்டும் தேர்வாகினர்.

**ஒருநாள் அணி:** பட்லர் (அணித் தலைவர்), ரெஹான் அகமட், அட்கின்சன், ஹரி புரூக், பிரைடன் கார்ஸ், ஜாக் கிராலே, சாம் கர்ரான், டாம் ஹார்ட்லி, வில் ஜாக்ஸ், லியாம் லிவிங்ஸ்டன், போப், பில் சால்ட், ஜோஷ் டங், ஜோஷ் டர்னர்.

**'ரி20' அணி:** பட்லர் (அணித் தலைவர்), ரெஹான் அகமட், மொயீன் அலி, அட்கின்சன், ஹரி புரூக், சாம் கர்ரான், பென் டக்கெட், வில் ஜாக்ஸ், லிவிங்ஸ்டன், டிமால் மில்ஸ், அடில் ரஷித், பில் சால்ட், ஜோஷ் டங், ரீஸ் டாப்லே, ஜோஷ் டங், கிறிஸ் வோக்ஸ். (7)




| நிலை | அணி | போட்டி | வெற்றி | தோல்வி | புள்ளி |
|---|---|---|---|---|---|
| 1 | இந்தியா | 9 | 9 | 0 | 18 |
| 2 | தென்னாபிரிக்கா | 9 | 7 | 2 | 14 |
| 3 | அவுஸ்திரேலியா | 9 | 7 | 2 | 14 |
| 4 | நியூசிலாந்து | 9 | 5 | 4 | 10 |
| 5 | பாகிஸ்தான் | 9 | 4 | 5 | 8 |
| 6 | ஆப்கானிஸ்தான் | 9 | 4 | 5 | 8 |
| 7 | இங்கிலாந்து | 9 | 3 | 6 | 6 |
| 8 | பங்களாதேஷ் | 9 | 2 | 7 | 4 |
| 9 | இலங்கை | 9 | 2 | 7 | 4 |
| 10 | நெதர்லாந்து | 9 | 2 | 7 | 4 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையர் ஒருவர் இந்தியாவில் கைது

(சென்னை)

விடுதலைப்புலிகளுடன் தொடர்பு என தெரிவித்து இலங்கைப் பிரஜை ஒருவர், மண்டபம் பொலிஸாரால் இராமேஸ்வரத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் காலை 7 மணியளவில் தனுஷ்கோடி-அரிச்சல்முனை கடற்கரையோரத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் அதிகாரிகளினாலேயே குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் பல குற்றச்செயல்களில் ஈடுபட்டவர் என்றும் கைதுக்கு அஞ்சியே அவர் இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு தப்பி வந்துள்ளதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அதுமாத்திரமல்லாமல் குறித்த சந்தேகநபரை இராமேஸ்வரத்தில் உள்ள நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தி சென்னை புழல் மத்திய சிறையில் அடைக்க உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளையும் பொலிஸார் முன்னெடுத்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (நி-6)

## மின் உற்பத்தி அதிகரிப்பு

(கொழும்பு)

மழையுடனான காலநிலை காரணமாக நாட்டில் உள்ள மின்னுற்பத்தி நிலையங்களின் மின்னுற்பத்தி 58 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

இலங்கை மின்சார சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், நீர் மின்னுற்பத்தி நிலையங்களைச் சார்ந்த நீர்த் தேக்கங்களின் கொள்ளளவு 84 சதவீதத்தை கடந்துள்ளதாக இலங்கை மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் பொறியிலாளர் நோயெல் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, தேசிய மின் கட்டமைப்பில் அனல் மின் நிலையங்களின் பங்களிப்பு குறைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-6)


## நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்
## தனியார் பாதுகாப்பு சேவை பெற்றுக்கொள்ளல் தொடர்பான கேள்வி அறிவித்தல் - 2024

நல்லூர் பிரதேசசபையின் உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழுத்தலைவரால் இலங்கை பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்த தகுதி வாய்ந்த விலைக் கேள்விதாரர்களிடமிருந்து கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் **விபரிக்கப்பட்ட** இடங்களிற்கு பாதுகாப்பு சேவையினைப் பெற்றுக்கொள்ளல் தொடர்பாக அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

**கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி : 2023.11.13 - 2023.11.30 நண்பகல் 12.00 மணிவரை**
**கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி : 2023.11.30 பி.ப 14.00 மணி வரை**
**கேள்வி திறக்கும் திகதி : 2023.11.30 பி.ப 14.30 மணி**

1. கேள்வி கோரல்கள் யாவும் தேசிய போட்டி விலைக்கேள்வி நடைமுறையின் ஊடாக மேற்கொள்ளப்படும்.
2. விலைக் கேள்விதாரர் வலிதான வியாபார பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் கறுப்புப் பட்டியலில் இடம்பெறாமல் இருக்க வேண்டும்.
3. கேள்விதாரர் யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைந்த நிலையான தொலைபேசி தொடர்பிலக்கத்துடன் கூடிய ஒரு பதிவுக் காரியாலயத்தையோ அல்லது கிளைக் காரியாலயத்தையோ கொண்டிருத்தல் வேண்டும். அவசியமேற்படுமிடத்து குறித்த முகவரி நேரில் பரிசீலிக்கப்படும். மேலும் **சேவை வழங்குநர் தெரிவில் இவ்விடயம் முக்கியமாக கருத்திற்கொள்ளப்படும்.**
4. தகுதிவாய்ந்த விலைக் கேள்விதாரர் விலைக் கேள்விப்பத்திரங்களை பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பக்கடிதத்தினை சமர்ப்பித்து அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகம், நல்லூர் பிரதேச சபை, கொக்குவில் மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 3.00 மணி வரை மீளளிக்க முடியாத கேள்வி படிவக்கட்டணமாக **ரூபா 2,000.00** இனையும், மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப்பணமாக **ரூபா 25,000.00** இனையும் பணமாகச் செலுத்துவதன் மூலம் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.
5. தெரிவு செய்யப்படும் நிறுவனம் செயலாற்றுகை பிணை முறியாக **ரூபா 400,000/=** ஐ செலுத்தி ஒப்பந்தமொன்றை செய்து கொள்ள வேண்டும்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்விப்பத்திரங்களை இரு பிரதிகளில் தயாரித்து தலைவர், **உள்ளூராட்சி பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, கொக்குவில்** என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரும், மூலப்படிவம் கொண்ட தபாலுறையில் **மூலப்பிரதி** எனவும் இணைப்படிவத்தில் **இணைப்பிரதி** எனவும் எழுதப்பட்டு தனித்தனி உறையிலிட்டு அவ்விரண்டினையும் பிறிதொரு உறையிலிட்டு **"செயலாளர்,நல்லூர் பிரதேசசபை, இல,14ஃ5, கருவப்புலம் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்."** எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ (பதிவுத்தபால் முடிவுத்திகதிக்கு முன்னர் கிடைக்கப் பெற வேண்டும்) அல்லது நேரடியாகவோ அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். பிந்திய விலைக்கேள்வி விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.
7. கேள்வி திறக்கப்படும் போது கேள்வியாளரோ அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியோ சமுகமளிக்க முடியும்.
8. கேள்வி கோரல் விண்ணப்பங்கள் யாவும் கேள்வி கோரல் மூடியதனைத் தொடர்ந்து கேள்விதாரர்கள்/ கேள்விதாரர்களினால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.
9. இக்கேள்வி அறிவித்தல் தொடர்பாக **நல்லூர் பிரதேசசபை பெறுகைக்குழுவால்** எடுக்கப்படும் முடிவு இறுதியானதாகும்.
10. மேலதிக விபரங்களை அலுவலக கடமை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | பாதுகாப்புச் சேவை தேவைப்படும் இடம் | தேவைப்படும் ஆளணி எண்ணிக்கை | | சேவை தேவைப்படும் காலம் |
|---|---|---|---|---|
| | | இரவு | பகல் | |
| 1 | தலைமை அலுவலகம் | 01 | 01 | 2024.01.01-2024.12.31 |
| 2 | கொக்குவில் உப அலுவலகம், கொக்குவில் சந்தை மற்றும் கொக்குவில் ஆயுள் வேத வைத்தியசாலை | 01 | 01 | |
| 3 | கோண்டாவில் ஆயுள்வேதம் வைத்தியசாலை | 01 | சனி,ஞாயிறு பொது விடுமுறை தினங்களில | |
| 4 | திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவ நிலையம், காரைக்கால் | 01 | 01 | |
| 5 | திருநெல்வேலி சந்தை | 01 | 01 | |
| 6 | கொக்குவில் பொது நூலகம் | 01 | - | |
| | மொத்தம் | 06 | 05 | |

**தலைவர்,**
**உள்ளூராட்சி பெறுகைக்குழு,**
**நல்லூர் பிரதேசசபை, கொக்குவில்.**

(C-7617) **2023.11.13**


# இராசிபலன்

**13.11.2023**
**ஐப்பசி 27, திங்கட்கிழமை**
**அமாவாசை பிற்பகல் 03.30 மணிவரை**
**விசாகம் பின்னிரவு 4.29 மணிவரை**

**சுபநேரம் -12.07-1.37மணிவரை**
**இராகு காலம்-7.37-9.07 மணிவரை**
**கேதார கௌரி விரதம் நிறைவு**
**அமாவாசை விரதம்**

**சந்திராஷ்டமம்**
**அச்சுவினி**

**வளவன்**

**மேஷம்**
வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு

**கடகம்**
மனதில் நீண்ட நாட்களாக இருந்த பாரம் குறையும், புதிய பொறுப்புகள் வந்து சேரலாம், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம்.

**துலாம்**
குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், பெரிய மனதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**மகரம்**
அதிஷ்டகரமான சம்பவங்கள் இடம்பெறலாம், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு, செய்தொழில் மேன்மையுண்டு, காரிய அனுகூலமுண்டு.

**ரிஷபம்**
ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள், தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும் நாள், எளிதில் உணர்ச்சி வசப்படுவதை தவிர்ப்பது நல்லது.

**சிம்மம்**
தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், ஆதாயம் அதிகரிக்கும், போசன சுகமுண்டு, எடுத்த காரியங்களில் அதிக அக்கறை காட்டுவீர்கள்,

**விருச்சிகம்**
சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, பணத் தேவைகள் பூர்த்தியாகும் வாய்ப்புண்டு, வீட்டுப் பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரலாம்.

**கும்பம்**
தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வீண் பழிகள் அகலும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, ரோக பயமுண்டு.

**மிதுனம்**
வருமானம் பெருக திட்டங்கள் தீட்டுவீர்கள், நல்லவர்களின் தொடர்பால் நலம் காணும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி**
வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், வீண் விவாதங்களை தவிர்ப்பது நல்லது, வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**தனுசு**
குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், போசன சுகமுண்டு.

**மீனம்**
கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், கொடுக்கல்-வாங்கல்களில் நிதானம் தேவை, தேக நலனில் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



551 இன்பன்ட்ரிபிரிகேடின் படைகள் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்ட உருத்திர புரத்தில் அமைந்துள்ள புனிதபர்த்திமா றோ.க.த.க பாடசாலை மற்றும் உரு த்திரபுரத்தில் வசிக்கும் மக்களுக்குமான வேணீர் திட்டத்திற்கான கட்டுமானப் பணிகள் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்றது.

## நூல் அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

அ.இரவி எழுதிய "கொற்றவை புற்றி கூறி னேன்" நூல் அறிமுக மும் கலந்துரையாடலும் நிகழ்வு நாளை செவ் வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தியில் உள்ள தேசிய கலை இலக்கியப் பேர வையின் கவிஞர் முரு கையன் கேட்போர் கூட த்தில் எழுத்தாளரும் ஓய் வுநிலை கிராமசேவகரு மான வடகோவை வர தராஜனின் தலைமை யில் இடம்பெறவுள் ளது. (நி-6)





கிளிநொச்சி மாவட்ட செயல கம் மற்றும் பிர தேச செயலகங் கள் ஆகியவற் றுக்கு இடையில் நடத்தப்பட்ட பிர தான செயலாற் றுகை குறிகாட்டி களின் மதிப்பீடு 2022 இற்கான விருது வழங் கும் நிகழ்வு கட ந்த வெள்ளி கிழமை கிளி நொச்சி மாவட்ட அரசாங்க அதி பர் திருமதி. றூப வதி கேதீஸ்வரன் தலைமையில், மாவட்ட செயலக மாநாட்டு மண் டபத்தில் இடம் பெற்றது.


## நல்லூர் பிரதேச சபை
## வழங்குநர்களை பதிவு செய்தல் 2024

சபையானது 2024 ஆம் ஆண்டிற்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் சேவைகளை வழங்குவதற்கு தம்மை பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்களை ஏற்கவுள்ளது.

**1. பொருட்கள்**

1.1. காகிதாதி எழுதுபொருட்கள்
1.2. அலுவலக உபகரணங்கள் (தளபாடங்கள்)
1.3. சித்த மருத்துவ மருந்துகள்
1.4. நூலகங்களுக்கான நூல்கள்
1.5. துணி வகைகள்
1.6. கட்டட பொருட்கள் (சீமெந்து ,ஓடுகள், கம்பிவகைகள்)
1.7. கற்கள்/மணல்
1.8. தீந்தை வகைகள் (Paints) நிறம் தீட்டும் பொருட்கள்
1.9. நீர் வழங்கும் குழாய்கள் மற்றும் ஏனைய பொருட்கள்
1.10. வாகன உதிரிப்பாகங்கள், துணைப்பொருட்கள்
1.11. மின்வழங்கு பொருட்கள்,மின்பாவனைப் பொருட்கள்
1.12. எரிபொருட்கள், உராய்வு நீக்கி
1.13. இரும்புப் பொருட்கள்
1.14. தீராந்திகள், பலகைகள், சட்டங்கள்
1.15. பனைமரங்கள், சலாகைகள்
1.16. வாகனங்களுக்கான ரயர், ரியூப் மற்றும் மின்கலங்கள்
1.17. கணனி, பிரதியாக்கல் இயந்திரம் மற்றும் இவற்றுக்கான உதிரிப்பாகங்கள்
1.18. சுத்திகரிப்பு பொருட்கள், கிருமிநாசினிகள்
1.19. பாதணிகள், தோற்பொருட்கள், மழைஅங்கிகள்
1.20.அலங்காரப் பொருட்கள்
1.21.இலத்திரனியல் பொருட்கள்

**2. சேவைகள்**

2.1. அச்சிடுதல், பதாகைகள் அமைத்தல், ஸ்ரிக்கர் அச்சிடுதல், நூல்கள் கட்டுதல்
2.2. மோட்டார் வாகனங்கள், உழவு இயந்திரங்கள் திருத்துதல்
2.3. வாகனங்களுக்கு ரியூப் ஒட்டுதல், ரயர் மாற்றுதல்
2.4. ஒட்டுவேலைகள், உலோகவேலைகள்
2.5. கனரக வாகனங்களின் சேவை, வாடகைக்கு விடல்
2.6. மின்சாதனங்கள் திருத்தம், மீள மின் வலுவூட்டல்
2.7. இலத்திரனியல் சாதனங்கள் திருத்தம்
2.8. வாகனங்கள் சுத்திகரிப்பு
2.9. கோலவுடை தைத்தல்
2.10.கணனி, பிரதியாக்கல் இயந்திரம் திருத்தம், சுத்திகரிப்பு
2.11. இறப்பர் முத்திரை தயாரித்தல்
2.12.வீதி விளக்குகள் பொருத்துதல்
2.13.மயானங்களில் இறந்த உடல்களை எரியூட்டல்
2.14.வீதி, கட்டடம் புனரமைப்பு, நிர்மாண வேலை
2.15.கழிவகற்றல் சேவை (Gully emptier service)
2.16.சுத்திகரிப்பு சேவை
2.17.திண்மக்கழிவு தரம் பிரித்தல்
2.18.வீதியோரம், வடிகால் பராமரிப்பு சேவை

பதிவின் பொருட்டு வியாபாரப் பெயர்ப்பதிவுச் சான்றிதழின் பிரதி சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு பொருட்கள் சேவைக்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும். படிவங்களை சபையின் தலைமை அலுவலகத்தின் நிதிக்கிளையில் 14.11.2023 ஆம் திகதியிலிருந்து 15.12.2023 ஆம் திகதி வரை அலுவலக நேரத்தில் ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் பதிவுக்கட்டணமாக ரூபா 1000.00 (வரிகள் நீங்கலாக) செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பப்படிவங்கள் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"வழங்கல் சேவைக்கான விண்ணப்பம் 2024"** எனக் குறிப்பிட்டு நேரடியாகவோ / பதிவுத்தபால் மூலமோ **செயலாளர், நல்லூர் பிரதேச சபை, இல 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில்** எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் **18.12.2023** ஆம் திகதி **மு.ப 10.00** மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். மேலதிக விபரங்களுக்கு 021-222-2700 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

(சி-7618)

செயலாளர், நல்லூர் பிரதேச சபை.



## அந்தியேட்டி நினைவஞ்சலி

தோற்றம் – 11 – 05 – 1941



மறைவு – 16 – 10 – 2023

**அமரர்.திலகவதி கனகசபை**

திதி:- துதியை

"விழி மூடி ஓர் மாதம் நொடிப் பொழுதில் வந்தாலும்- நாம் திரும்பும் திசையெங்கும் உன் நினைவுருவம் நிழலாய்த் தோன்றுதம்மா"

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

கடந்த 16.10.2023 திங்கட்கிழமை இறைபதமடைந்த எமது தாயார் அமரர். திலகவதி கனகசபை அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 14.11.2023 செவ்வாய்க்கிழமை காலை 6 மணியளவில் முருகன் கோவிலடியிலும் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். (சி-7619)

முருகன் கோவிலடி, புலோலி. குடும்பத்தினர்.



## 23 ஆம் ஆண்டு நினைவில்

வாழ்வுக்காக 1960.01.04

ஓய்வுக்காக 2000.10.25



அமரர்

**கந்தப்பு தவராசா**

(பவர்)

அன்பு காட்டுகையில் அன்னையாய்
அறிவுரை கூறுகையில் தந்தையாய்
நெறிப்படுத்துகையில் நல்லாசானாய்
துன்பம் நேர்கையில் தோழனாய்
அநியாயங்களை தட்டிக் கேட்பதில் வீரனாய்
கல்வியிலே உயர்வு பெற்று பார்புகழ வாழ்ந்தீர்கள்
வந்தே விடுங்கள் எம்மிடம்!

(சி-7619)

கரவெட்டி மத்தி, கரவெட்டி

நினைவுத் துயரில் மனைவி, பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்திரு கந்தையா தெய்வேந்திரம் SLAS (Special grade) அவர்களின்
# சேவைநலன் பாராட்டு விழா சிறப்பு மலர்

### பண்பும், பணிவும் கொண்ட பண்பாளர்



கடவுள் பக்தியும். கல்வியில் ஆர்வமும் விடாமுயற்சியும் கொண்ட திரு.தெய்வேந்திரம் அவர்களின் மணிவிழாக் குறித்து ஆசீர்வதித்து வாழ்த்துவதில் ஆனந்தமடைகிறேன். பளை மகா வித்தியாலயத்தில் உயர்தர வகுப்பில் கற்கும் காலத்தில் அவரை யான் அறிவேன். எனது சகோதரனின் பிரியத்துக்குரிய மாணவன். அவரது படிப்படியான வெற்றிகள் அவரது ஆற்றலின் வெளிப்பாடுகள்.இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்திபெற்று பல உயர்பதவிகளை வகித்து இளைப்பாறுகிறார். அவரது அன்புக்குரிய நண்பர்கள் கூடி மணிவிழா எடுப்பது பெருமைக்குரிய விடயமாகும். நல்லூர் கந்தன் மீது மிகுந்த பக்தியுடைய மணிவிழா நாயகர் திருவிழாக்காலங்களில் தினமும் அதிகாலையில் வழிபாடு செய்வார். அவரது பண்பும். பணிவும் என்றும் அவரையும் அவரது குடும்பத்தையும் ஆற்றுப்படுத்தும்.எனது இதய பூர்வமான ஆசிகள் உரித்தாகுக.

**கலாநிதி செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன்,**
**(தலைவர் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.)**

### அருவிபோல் ஊற்றெடுத்த எங்கள் நட்பு



அகவை அறுபது காணும் அருமை நண்பன் தெய்வேந்திரம் அவர்களுக்கு மனம் கனிந்த நல்வாழ்த்துக்கள் கூறுவதில் அக மகிழ்கின்றேன். பல்கலைக்கழக நண்பனாக ஆரம்பித்த நட்பு பல்வேறு பதவிகளை அலங்கரித்து இன்றுவரை நட்பு அருவிபோல் ஊற்றெடுத்து ஓடிக்கொண்டிருக்கின்றது. நண்பன் தெய்வேந்திரம் அவர்களுடைய எண்ணங்கள்.சிந்தனைகள்.பிறரின் தேவைக்கு ஏற்ப உதவி செய்யும் நல்ல குணம். அயராத முயற்சி மற்றும் ஓயாத கடமையுள்ளம் என்றும் என் நெஞ்சை விட்டு அகலா நினைவுகள். இன்றுபோல் என்றும் கல்விக்கும் சமூகத்திற்கும் நற்தொண்டுகள் ஆற்றி நீண்ட ஆயுளுடன் சீரும் சிறப்புடனும் வாழ எனது நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

**இ. வரதீஸ்வரன்,**
**(செயலாளர், உள்ளூராட்சி அமைச்சு, வட மாகாணம்.)**

### கிளிநொச்சி மாவட்டத்திற்கு புகழ் சேர்த்த அதிகாரி



எமது மாவட்டம் குறித்து நோக்கும் போது இலங்கை நிர்வாக சேவையின் அதிசிறப்பு வகுப்பைச் சேர்ந்த சாதனையாளராக திரு.தெய்வேந்திரம் திகழ்கிறார். அத்தோடு அவரது சேவைக் காலத்தில் வடகிழக்கு மாகாண வீடமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் திட்டப் பணிப்பாளராக பணியாற்றியபோது எமது மாவட்டத்தில் அதன் தலை மையகத்தை அமைத்து செயற்பட்டவர். தெய்வேந்திரம் அவர்களின் சேவைக்காலம் போல ஓய்வுக்காலமும் மகிழ்ச்சியளித்திருக்க வாழ்த்தி அவரது மணிவிழாவுக்கும் பச்சிலைப்பள்ளியின் அக்கறையாளர்களுக்கும் எனது உளமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திருமதி.றூபவதி கேதீஸ்வரன்,**
**(அரச அதிபர், கிளிநொச்சி மாவட்டம்.)**

### நிறைந்த ஆரோக்கியத்துடன் நீடு வாழி



மிகவும் ஒரு எளிமையான விவசாயக் குடும்பத்தில் பிறந்து தனக்குக் கிடைத்த மிகக் குறைந்த வசதிகளை மிகவும் வினைத்திறனாகவும். விளைதிறன் மிக்கதாகவும் பயன்கருதி இடைவிடாது ஒரு உயர்ந்த இலட்சியத்தை தன்னகத்தே ஏற்படுத்தி அதனை அடைவதற்கு விடாமுயற்சியுடன் வேகமாக அடைந்த உன்னத மனிதர் என்றால் அது மிகையாகாது.

கல்வி கற்றலில் அவர் காட்டிய ஆர்வம். இலக்கை அடைவதற்காக அவர் மேற்கொண்ட விடாமுயற்சிகள். போட்டிப் பரீட்சைகளுக்கு தன்னைத் தயார்ப்படுத்தியவிதம் போன்ற அவரது வாழ்க்கையானது தற்கால மாணவர்களுக்கு ஒரு முன்மாதிரியாக அமைந்துள்ளது. எமது பிரதேசத்தில் தனது பணியை சிறப்பாக மேற்கொண்ட திரு.கந்தையா தெய்வேந்திரம் அவர்களது பணியை பாராட்டுவதோடு அவர் மேலும் தொடர்ந்து தனது பணியை ஆற்றுவதற்கான உடல். உள ஆரோக்கியத்துடன் குடும்பத்தினரோடு மகிழ்வாக வாழ எல்லாம் வல்ல இறைவனின் ஆசி வேண்டி வாழ்த்துவதில் மகிழ்வடைகின்றேன்.

**திரு.அருளானந்தன் சிவனருள்ராஜா,**
**(வலயக் கல்விப் பணிப்பாளர், கிளிநொச்சி வடக்கு)**



### பணியும், பணிக்காலமும்

- 1991- திட்ட அலுவலர் (Project Officer) -தமிழர் புனர்வாழ்வுக் கழகம் (TRRO)
- 1993- பயிலுநர் பட்டதாரி ஆசிரியர் -கொ/சென் செபஸ்ரியன் மகா வித்தியாலயம்
- 1994 - உதவி முகாமையாளர் - இலங்கை துறைமுக அதிகாரசபை
- 1994 - புள்ளிவிபரவியலாளர் -தொகை மதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்
- 1995 - இலங்கை நிர்வாக சேவை (SLAS) (பயிற்சியாளர்) - இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் (SLIDA)
- 1996- உதவி ஆணையாளர் -கமநலசேவைகள் திணைக்களம், வவுனியா
- 2005- சிரேஷ்ட உதவி ஆணையாளர் -கமநல சேவைகள் திணைக்களம்
- 2008- பிரதித்திட்டப் பணிப்பாளர் (NECCDEP) -யாழ்ப்பாண மாவட்ட செயலகம்
- 2011- திட்டப் பணிப்பாளர் (NEHRP) (வடக்கு -கிழக்கு மாகாணம்)-பரந்தன்
- 2013- செயலாளர் -மாகாண பொது சேவை ஆணைக்குழு-வடமாகாணம்
- 2016- செயலாளர்- மாகாணசபைச் செயலகம், வட மாகாணம்
- 2018- செயலாளர்- விவசாய அமைச்சு, வட மாகாணம்
- 2021- மேலதிகச் செயலாளர்- நீர் வழங்கல் அமைச்சு, கொழும்பு
- 2022- செயலாளர்- நிதித் திட்டமிடல் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு வட மாகாணம்.

### நிறைந்த ஆரோக்கியத்துடன் நீடு வாழி



இலங்கை நிருவாக சேவை உத்தியோகத்தர்களுக்கான ஓராண்டு காலப் பயிலுநர் பயிற்சிநெறி 1995 ஏப்ரலில் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தில் தொடங்கியது. சக பயிலுநர்களாக இருக்கும் காலத்தே நான் கந்தையா தெய்வேந்திரத்தைச் சந்தித்திருக்கின்றேன்.அதன்பின்னர் 27 ஆண்டுகளுக்கு மேலாக இச்சேவையில் பணியாற்றி. இவ்வுலக ஞானத்திலும் ஆறு தசாப்தங்களை 2022 இல் நிறைவு செய்ததெய்வேந்திரம் 2022 நவம்பரில் பொதுச் சேவையிலிருந்து ஓய்வு பெற்றதன் மேல் அவர் பிறந்த மண்ணாம் பச்சிலைப்பள்ளியின் மக்கள் அவர்தம் வாழ்வைச்சிலாகித்து விழாவெடுக்கும் தருணமிது. இம்மகிழ்ச்சி நிரம்பிய சந்தர்ப்பத்திலே. ஊதியத்துக்கான சேவையிலிருந்து ஓய்வு பெற்றிருப்பினும். அவர் தம்மை நாடி. வருவோர்க்கு நன் மதியுரைத்து. சமூக மேம்பாட்டுக்காகத் தன்னாலியன்ற நற்பணி புரிந்து. தனது குடும்பமும் உற்றாரும் சுற்றமும் சூழ நிறைந்த ஆரோக்கியத்துடன் நீடுவாழ வாழ்த்துகின்றேன்.

**இளமதி சபாலிங்கம்,**
**(செயலாளர், வட மாகாண சபை, கைதடி,யாழ்ப்பாணம்.)**

### சிறந்த முகாமைத்துவம் கொண்டவர்



திரு.கந்தையா தெய்வேந்திரம் அவர்களின் பணி நயந்து கொண்டாடும் இந்நாளில் இவரோடு ஏக காலத்தில் நிருவாக சேவைக்குத் தெரிவாகி அவர் பணியாற்றிய பதவிகளில் தொடர்ந்து பணியாற்றி வந்தவன் என்ற வகையிலும். ஏக காலத்தில் யாழ். பல்கலைக் கழகத்தில் ஒன்றாகப் பயின்றவன் என்ற வகையிலும் அவரை நானும் வாழ்த்தி மகிழ்கிறேன்.

தெய்வேந்திரம் ஒரு நிருவாக சேவை உத்தியோகத்தராக மட்டுமல்லாது சிறந்த முகாமைத்துவப் பயிற்சியாளராகவும் அறியப்பட்டவர். அவரது வழிகாட்டலில் பலர் அகில இலங்கை ரீதியான போட்டிப் பரீட்சைகளில் சித்தி பெற்று தெரிவாகியிருக்கிறார்கள். அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றாலும் அவர் தனது இயல்புக்கேற்ப பல பணிகளைத் தொடர்ந்தும் ஆற்றிய வண்ணமுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. திரு.தெய்வேந்திரம் அவர்களின் ஓய்வுக்கால வாழ்வு ஆரோக்கியமானதாகவும். மகிழ்வானதாகவும் அமைய எனது வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

**அ. சிவபாலசுந்தரன்,**
**(அரசாங்க அதிபர், யாழ். மாவட்டச்செயலாளர், யாழ்ப்பாணம்.)**

### பண்புடன் பழகும் நற்பண்பு கொண்டவர்



இயற்கை வளங்கள் நிறைந்து என்றும் பசுமையாக திகழும் பச்சிலைப் பள்ளியிலே உள்ள அல்லிப்பளை கிராமத்திலே 1962 ஆம் ஆண்டு வந்துதித்த கந்தையா தெய்வேந்திரம் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மிகவும் மகிழ்வடைகின்றேன்.

தெய்வேந்திரம் அவர்களே பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவிலிருந்து இலங்கை நிர்வாக சேவைக்கு தெரிவு செய்யப்பட்ட முதல் நபராவார். நிர்வாக சேவையில் பல்வேறு பதவிகளை வகித்த இவர் 2011 ஆம் ஆண்டு வடக்குக் கிழக்கு வீடமைப்பு புனர் நிர்மாண திட்டப்பிரதித் திட்டப்பணிப்பாளராக கடமையாற்றியிருந்தார். இப்பிரிவில் இடம்பெற்ற பல்வேறு இடப்பெயர்வுகளால் தமது அடிப்படைத் தேவைகள் யாவற்றையும் இழந்து 2010 இல் மீள்குடியேறிய மக்களுக்கு அத் திட்டத்தினூடாக தன்னாலான உதவித் திட்டங்களை வழங்கினார். சகலருடனும் அன்புடனும். பண்புடனும் பழகும் நற்பண்பு கொண்ட இவரது ஓய்வுக் காலம் சிறப்பாக அமையவும் நோய்நொடியின்றி நீண்ட காலம் வாழவும் இறைவனை வேண்டி. இவ் வாழ்த்துரையினை நிறைவு செய்கின்றேன்.

**சி.ச.கிருஷ்ணேந்திரன்,**
**(பிரதேச செயலாளர், பிரதேச செயலகம்,பச்சிலைப்பள்ளி.)**

### கருமமே கண்ணாயிருந்த சாதனை வீரன்



பளை மகா வித்தியாலயத்தில் க.பொ.த உயர்தரம் படித்த காலம் என்றும் மறக்க முடியாத காலம். அதிலும் பளை மகா வித்தியாலயத்தின் க.பொ.த உயர்தரத்தின் 3 ஆம் அணி. 4 ஆம் அணி மிகவும் சிறப்பானது எனலாம். 3.4 ஆம் அணி மாணவர்களின் செயற்பாடுகள். மாணவர்களின் நற்பழக்கங்கள் சிறப்பான அம்சத்தை கொண்டுள்ளது. அதிலும் 3 ஆம் அணியில் கந்தையா தெய்வேந்திரம் படித்தார். 4ஆம் அணியில் நான் படித்தேன்.

வகுப்பு வேறுபாடு இருந்தும். 3 ஆம் அணி மாணவர்களுடன் சிறந்த நட்பு அன்றும் இன்றும் இருந்து வருகிறது என்ற வகையில் தெய்வேந்திரத்துடன் எண்பதுகளில் இருந்து இன்றுவரையும் சிறப்பான நட்புடன் பழகி வருபவர்களில் நானும் ஒருவன். அந்தவகையில் பெருமை கொள்கிறேன்.தெய்வேந்திரத்திற்கு மதிப்பளிப்பு செய்ய இருக்கின்றோம் என்று நண்பர் ஒருவருடன் கதைத்தேன்.

அப்போது அவர் சொன்னார். வவுனியாவுக்கு கடமை நிமித்தம் தான் சென்றதாகவும் அப்போது தெய்வேந்திரம் பற்றி உரையாடல் வந்ததாகவும் இப்போது தெய்வேந்திரம் அவர்களை தெய்வம் என்று வர்ணித்தார்கள்.

அப்படித்தான் தெய்வேந்திரம் மக்களுக்கு சேவையாற்றியுள்ளார். இப்படிப்பட்ட ஒரு நண்பனின் மதிப்பளிப்பு நிகழ்வை முன்னெடுப்பதிலும் நிகழ்வுக்கு தலைமை தாங்கும் பாக்கியம் கிடைத்ததையிட்டு பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

**சுந்தரம் திருநாவுக்கரசு,**
**(ஓய்வுநிலை அதிபர்,விழாக்குழுத் தலைவர்.)**


## அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
## இன்றைய விழா சிறப்புற அமையட்டும். விழாக்குழு-நண்பர்கள் வட்டம்
## கிளி/ பளை மத்திய கல்லூரி

(17854)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## மனிதனைக் கொன்ற ரோபோ தென்கொரியாவில் பரபரப்பு



(சியோல்)

தென்கொரியாவிலுள்ள தொழிற்சாலையொன்றில் ரோபோவொன்று பெட்டிக்கு பதிலாக ஊழியர் ஒருவரை பெல்டில் ஏற்றி கொலை செய்த ச்ம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நேற்று முன்தினம் தெற்கு கியோங்சாங் மாகாணத்திலுள்ள காய்கறிகளை ஏற்றுமதி செய்யும் தொழிற்சாலை ஒன்றில் காய்கறி பெட்டிகளை கன்வேயர் பெல்டில் ஏற்றும் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்த ரோபோவொன்றே, காய்கறி பெட்டிக்கு பதிலாக அங்கிருந்த ஊழியர் ஒருவரை கன்வேயர் பெல்டில் வைத்து அவரது மார்பையும், முகத்தையும் நசுக்கி ஏற்றியுள்ளது.

இதில் படுகாயமடைந்த ஊழியர் அங்கிருந்து வெளியே வர முடியாமல் கதற, அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் அவரை மீட்டு மருத்துவ மனையில் அனுமதித்துள்ளனர்.

எனினும் அந்நபர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். இச்சம்பவமானது உலகளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ள நிலையில் "இனி வரும் காலங்களில் இது போன்ற விபத்துக்களை தடுக்க துல்லியமான பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படும்" என குறித்த தொழிற்சாலை தெரிவித்துள்ளது.

தென்கொரியாவில்ரோபோக்கள் மூலம் இதுபோன்ற விபத்துக்கள் நடப்பது இது முதல்முறை அல்ல.

இதற்கு முன்னர் கடந்த மார்ச் மாதம், வாகன உதிரிப்பாகங்கள் தொழிற்சாலையில் பணியாற்றி வந்த ரோபோ அங்குள்ள ஊழியரைக் கடுமையாக தாக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## தெற்கு காசாவை நோக்கி படையெடுக்கும் மக்கள்



(காசா)

காசாவின் வடக்கு பகுதியில் இஸ்ரேல் இராணுவம் தொடர்ந்தும் இருவழி தாக்குதல்களை நடத்தி வரும் நிலையில் அங்குள்ள மக்கள் தெற்கு காசாவை நோக்கி படையெடுத்து வருகின்றனர்.

கடந்த 24 மணி நேரத்தில் சுமார் 15 ஆயிரம் பேர் வடக்கு காசாவை விட்டு வெளியேறியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

போர் தொடங்கிய ஒரு வாரத்தில் இஸ்ரேல் இராணுவம் விடுத்த எச்சரிக்கையை அடுத்து முன்னதாக பல்லாயிரக்கணக்கான மக்கள் தெற்கு காசாவுக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

அவர்களில் பலர் சோதனை சாவடிகளை கடக்கும் போது இஸ்ரேலிய படைகளால் கைது செய்யப்படுவதாகவும் கூறப்படுகிறது.

இதற்கிடையில் இஸ்ரேல் இராணுவம் காசாவின் வடக்குப் பகுதியை மட்டுமல்லாமல் கான் யூனிஸ் நகரம் உட்பட தெற்குப் பகுதியையும் தொடர்ந்து தாக்கி வருகிறமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## காசாவை ஆக்கிரமித்து ஆட்சிபுரியும் எண்ணம் எமக்கில்லை

### நெதன்யாகு தெரிவிப்பு

(ஜெருசலேம்)

இஸ்ரேல் காசாவை ஆக்கிரமிக்கவோ அல்லது கைப்பற்றவோ, ஆட்சிபுரியவோ நினைக்கவில்லை என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

எனினும் ஹமாசை தோற்கடித்த பின்னர் காசாவிலிருந்து தீவிரவாத அச்சுறுத்தல்கள் எழுவதை தடுப்பதற்காக காசாவிற்குள் படையணியொன்று நுழைவது அவசியம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிவில் நிர்வாகமொன்று அவசியம் என குறிப்பிட்டுள்ள அவர் ஒக்டோபர் ஏழு தாக்குதல் போன்ற ஒன்று இடம்பெறாததை மீண்டும் உறுதி செய்ய வேண்டியுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

காசாவின் பாதுகாப்பிற்கு இஸ்ரேலே பொறுப்பு என இஸ்ரேல் பிரதமரின் கருத்திற்கு அமெரிக்கா



கடும் கண்டனம் வெளியிட்டுள்ள நிலையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (நி-6)

## ஐஸ்லாந்தில் 14 மணித்தியாலயத்தில் 800 நிலநடுக்கங்கள்

(ஐஸ்லாந்து)

ஐஸ்லாந்தின் தென் மேற்கு ரெய்க்ஜேன்ஸ் தீப கற்பத்தில் 14 மணி நேரத்தில் சுமார் 800 முறை நில நடுக்கங்கள் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.


இதில் மிகப்பெரிய நில நடுக்கமாக கிரைண்டா விக்குக்கு வடக்கே 5.2 ரிச்டர் அளவில் பதிவாகியுள்ளது.

இந்த நிலநடுக்கங்கள் எரிமலை வெடிப்புக்கு முன்னோடியாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

இதையடுத்து அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. நிலநடுக்கங்கள் காரணமாக உலக புகழ்பெற்ற சுற்றுலா தரமான புளூ லகூன் மூடப்பட்டுள்ளது.

நிலநடுக்கம், எரிமலை வெடிப்பு காரணமாக மக்கள் பாதுகாப்பில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

ஐஸ்லாந்தில் 33 எரிமலைகள் உள்ளன. இது ஐரோப்பாவில் உள்ள நாடுகளில் அதிக எண்ணிக்கையாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-6)



## பாலஸ்தீனர்களைப் பாதுகாக்க இஸ்ரேல் நடவடிக்கை எடுக்க வேண்டும்



(ஜெனீவா)

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் உள்ள பாலஸ்தீனர்களைப் பாதுகாக்க இஸ்ரேல் உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

ஹமாஸுடனான போர் தொடங்கியதில் இருந்து இஸ்ரேலியப் படைகளின் கைகளில் [illegible] மேற் பட்ட பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டதோடு பிராந்தியத்தில் வன்முறைகளும் அதிகரித்துள்ளன.

இஸ்ரேலியப் படைகள் மற்றும் குடியேறியவர்களிடமிருந்து நாளாந்தம் வன்முறைக்கு ஆளாகும் மேற்குக் கரையில் உள்ள பாலஸ்தீனியர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என வலியுறுத்தியுள்ளார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனாமா கால்வாயில் வறட்சி! சர்வதேச வர்த்தகம் முடங்கும் அபாயம்!

(பனாமா)

**பனாமா கால்வாயில் ஏற்பட்டுள்ள வறட்சியின் காரணமாக கப்பல்களை இயக்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதால் ஒரு மாதத்துக்கும் மேலாக சரக்குகளுடன் கப்பல்கள் நடுக்கடலில் காத்திருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளது. இதனால் சர்வதேச வர்த்தகமே முடங்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.**



சர்வதேச கடல்வழிப் போக்குவரத்தின் தன்மையை மாற்றியமைத்து எளிமையாக்கிய இரண்டு திட்டங்களாக சூயஸ் கால்வாயும் மற்றும் பனாமா கால்வாயும் திகழ்கிறது.

இந்தக் கால்வாயின் வழியாக நாளொன்றுக்கு 38 கப்பல்களும் ஆண்டுக்கு 14,000 சரக்குக் கப்பல்களும் செல்கிறது.

இந்த ஆண்டு பனாமா நாட்டில் மழைவீழ்ச்சி 30 சதவீதம் குறைவாக கிடைத்துள்ளது. இதனால் அந்தப்பகுதியில் வறட்சி ஏற்பட்டுள்ளது. பனாமா கால்வாயில் நீரின் அளவும் குறைந்துள்ளது.

இதன் காரணமாக கப்பல்களைக் கடல் மட்டத்திலிருந்து உயர்த்துவதில் சிரமமுள்ளதால், கப்பல் போக்குவரத்தின் அளவைக் குறைக்க வேண்டிய நிலைக்கு கால்வாய் நிர்வாகத்தினர் தள்ளப்பட்டுள்ளனர்.

கடந்த ஜூலை மாதம் வரை நாளொன்றுக்கு 38 கப்பல்கள் வரை பனாமா கால்வாய் வழியில் சென்ற நிலையில், தற்போது இந்த எண்ணிக்கை வெறும் 3 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

2024 பெப்ரவரி முதல் நாளொன்றுக்கு 18 கப்பல்களை கால்வாயினூடாக செல்ல அனுமதிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது சர்வதேச நீர்வழி வர்த்தகத்தினை பாதிக்கும் என நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். பனாமா கால்வாயினை கடக்க வரிசையில் காத்திருக்கும் கப்பல்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரிப்பது பல்வேறு பிரச்சினைகளுக்கு வழி வகுக்கும் எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

சர்வதேச அளவில் 5 சதவீத வர்த்தகத்தைக் கையாளும் பனாமா கால்வாய் முடங்கியிருப்பதால், உலகளாவிய விநியோகச் சங்கிலி கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

இதன் விளைவாக சர்வதேச அளவில் உணவு, எரிவாயு, சமையல் எண்ணெய் மற்றும் பிற பொருட்களின் விலைகள் உயரும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

இதனால் சர்வதேச கடல் வழிப் போக்குவரத்தை வலுப்படுத்த மாற்று வழித்தடங்களை உருவாக்குவது அவசியம் என்று பல்வேறு தரப்பிலிருந்தும் கோரிக்கைகள் விடுக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. (நி-6)

## இஸ்ரேலிய கப்பலின் வருகைக்கு எதிராக சிட்னியில் கடலில் இறங்கி ஆர்ப்பாட்டம்



(கன்பெரா)

அவுஸ்திரேலியாவின் சிட்னியின் பொட்டனி துறைமுகத்தில் திரண்ட ஆயிரக் கணக்கான பாலஸ்தீன ஆர்ப்பாட்டக்காரர்கள் இஸ்ரேலின் சரக்கு கப்பலின் வருகையை தடுத்துள்ளனர்.

ஆர்ப்பாட்டக்காரர்களில் ஒரு பகுதியினர் கரையில் நின்று கொடிகளை ஏந்தி கோசங்களை எழுப்பிய அதேவேளை ஏனையவர்கள் கடலிற்குள் இறங்கி இஸ்ரேலிய கப்பல் வரவுள்ள பகுதியை நோக்கி சென்றனர்.

சிட்னியின் பாலஸ்தீனத்திற்கான நீதி இயக்கமும் பலஸ்தீனத்திற்கான தொழிற் சங்கங்களும் இணைந்து இந்த ஆர்ப்பாட்டங்களை ஏற்பாடு செய்திருந்தன.

இது இஸ்ரேலிய கப்பல்களின் வருகைக்கு எதிரான போராட்டத்தின் ஆரம்பம் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.


குறிப்பிட்ட கப்பல் நிறுவனம் இஸ்ரேலிற்கு ஆயுதங்களை கொண்டு செல்கின்றது என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

பொட்டனி துறைமுகத்திற்கு கப்பல் வரும் ஒவ்வொரு தடவையும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவோம் என ஆர்ப்பாட்டங்களை ஏற்பாடு செய்த ஒருவர் தெரிவித்துள்ளார்.

உலகில் ஒவ்வொரு நாட்டிலும் துறைமுகங்கள் உள்ளன. இதன் அர்த்தம் என்னவென்றால் அவர்களுக்கு எதிராக ஒவ்வொரு துறைமுகத்திலும் நாங்கள் போராடலாம். அவர்களை மண்டியிடச்செய்யலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலை பொருளாதார ரீதியாக தாக்க தொடங்குங்கள். அது அவர்களை காயப்படுத்தும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-6)

## அமெரிக்க - சீன ஜனாதிபதிகள் சந்திப்பு



(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனுக்கும் சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங்கும் இடையில் அடுத்த வாரம் சந்திப்பொன்று இடம்பெறவுள்ளது.

சென்.பிரான்சிஸ்கோவில் நாளை மறுதினம் இந்த சந்திப்பு இடம்பெறவுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியாக ஜோ பைடன் தெரிவு செய்யப்பட்ட பின்னர், சீன ஜனாதிபதியை சந்தித்து கலந்துரையாடும் இரண்டாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

இந்த சந்திப்பின் போது இஸ்ரேல் - ஹமாஸ் போர் மற்றும் உக்ரைன் போர் உள்ளிட்ட முக்கிய விடயங்கள் தொடர்பில் அவர்கள் கலந்துரையாடுவர்கள் என சர்வதேச ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

# அத்திப்பிஞ்சு, காய், பழம், மது இவற்றின் மருத்துவக் குணங்கள்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

Botanical Name -Ficus racemasa
family-Moramosa

இலையுதிர் மரமாகும். கனிகள் அடிமரம் மற்றும் பிரதான கிளைகளில் கொத்துக் கொத்தாக தோன்றுகின்றன.கனிந்த நிலையில் நல்ல மணம் கொண்டவை. அத்தி மரம் பற்றிய பழமொழிகளில் அத்தியில் பூக்கள் கிடையாது என்ற கருத்து காணப்படுகிறது. "அத்தி பூத்தாற் போல்" கண்டு காய்ப்பது காணாமல் பூப்பது" என்று வழக்கு உண்டு உண்மையில் அத்தியும் மற்ற மரங்கள் போன்றே, பூத்துக் காய்க்கின்றது. அத்திக் காய் என்று. நாம் குறிப்பிடும் பகுதியே மஞ்சரியும், காயும் இணைந்த உறுப்பாகும்.

எமது · பிரதேசத்தில் கோயில் தோட்டங்களிலும், குளக்கரைகளிலும் அத்தி மரத்தை பொதுவாகக் காணலாம்.

அத்திப் பிஞ்சு பத்தியத்திற்கானது.அத்திப் பிஞ்சை ஒரு நாள் விட்டு ஒரு நாள் சமைத்து உண்ண வயிற்றுப் புண்ணை ஆற்றும் அல்லது அத்திப் பிஞ்சை எடுத்து துவரம் பருப்பிட்டு சமைத்து தொடர்ந்து 3 நாட்கள் உட்கொள்ள குடற்புண் படிப்படியாக குறையும்.


50 கிராம் அத்திப் பிஞ்சை 200 மில்லி இளநீரில் போட்டு அவித்து எடுத்து காலை உணவிற்கு முன் உட்கொள்ள வயிற்றுப்புண் ஆறும்.


இதனுடைய பிஞ்சு, காய், பழம், மது எல்லாமே மருத்துவக் குணங்கள் மிகுந்தவை. இதன் பிஞ்சு துவர்ப்பு சுவையுடையது. மூலநோய், இரத்த மூலம், வயிற்றுக்கடுப்பு ஆகிய வற்றையும் போக்கக் கூடியது. அத்திக் காயை பிஞ்சைப்போல சமைத்துச் சாப்பிட்டு வர பெண்களுக்கு ஏற்படும் வெள்ளை சாய்தல் நீங்கும். அத்துடன் மலத்தையும் இளக்கி வெளியேற்றும்.

அத்தி மரத்தின் பழங்களை சாதாரணமாகவே சாப்பிடலாம். மிகவும் சுவையாக இருக்கும். புழுக்கள் இல்லாத பழங்களாக பிரித்துப் பார்த்து சாப்பிட வேண்டும். இரத்தம் அதிகரிக்க அத்திப்பழம் சாப்பிடலாம். அதேபோல் உலர்ந்த அத்திப்பழம் ஒன்று, இரண்டு துண்டுகள் சாப்பிட்டு வந்தாலும் இரத்தம் விருத்தியடையும். செரிமானத்தையும் தூண்டும். என்பு அடர்த்தியை அதிகரிக்கும். இருதய ஆரோக்கியத்தையும் மேம்படுத்தும். மலச்சிக்கலையும் நீக்கும்.

### 100 கிராம் அத்திப் பழத்திலுள்ள சத்துக்கள்

புரதம் 1.3 கிராம், கொழுப்பு 0.2 கிராம், நார்ப்பொருள் 2.2 கிராம், கல்சியம் 80 மில்லிகிராம், பொஸ்பரஸ் 30 மில்லி கிராம், இரும்பு 1.0 மில்லி கிராம், உயிர்ச்சத்து C- 5 மில்லி கிராம், கரோட்டீன் 162 மைக்ரோ கிராம்.





### அத்திப் பழ யூஸ்

அத்திப்பழங்களை சேகரித்து கழுவி எடுத்துக் கொள்ள வேண்டும். பின்பு இவற்றை தோலுடன் ஒவ்வொரு பழத்தையும் 4 துண்டுகளாக வெட்ட வேண்டும். பழங்களிற்கு ஏற்ப தேன் சேர்த்தும், அளவான தண்ணீரும் சேர்த்து மிக்ஸியில் அடித்து யூஸ் ஆக தயாரித்து பருகலாம். சிறு குழந்தைகட்கும் கொடுக்கலாம். மேற்கூறிய மருத்துவக் குணங்களை பெற்றுக் கொள்ளலாம் அதிகரித்த பித்தத்தையும் தணிக்கக் கூடியது.

### அத்திப்பழ சர்பத்

தேனில் பதப்படுத்தியுள்ள அத்திப்பழம் 70 கிராம், பெருஞ்சீரகம் 70 கிராம், ரோஜா மொட்டு 140 கிராம், இலைகளை 400 மில்லி லீற்றர் வெந்நீரில் ஊறப்போட்டு 24 மணி நேரம் ஊறிய பின்பு அடுப்பிலேற்றி இறுகக் காய்ச்சி நன்கு பிசைந்து வடிகட்டி அதனுடன் 1500 கிராம் சீனியை நேர்த்து தேன் பதமாகக் காய்ச்சி வைத்துக் கொள்ளவும். பெரியவர்கள் 60 மில்லி சர்பத்துடன் 60 மில்லி நீர்விடும் படுக்கும் போது உட்கொள்ள மல மிளகி வெளிப்படும். குழந்தைகட்கு 2 முதல் 4 தேக்கரண்டி வரை கொடுக்க மலக்கட்டு நீங்கும். உடலை பலப்படுத்தும். 2 வயதிற்கு மேற்பட்ட குழந்தைகட்குத்தான் கொடுக்கலாம். உயிர்ச்சத்துக்களும், கனிமங்களும் நிறைந்த சிறந்த இயற்கை மென்பானமாகும்.

உலர்ந்த அத்திப்பழம் 10 கிராம் எடுத்து 300 மில்லி லீற்றர் பாலைக்காய்ச்சி ஆறவிட்டு அதில் அத்திப்பழத்தைப் போட்டு ஊற வைக்க வேண்டும். பின்பு 10 நிமிடங்கள் கழித்து உண்ண உடல் வறட்சி நீங்கி உடல் வலுவடையும். வாய் நாற்றமும் நீங்கும்.

அத்திப்பழ பார்லிக் கஞ்சி.

அத்திப்பழம் 50 கிராம்

பார்லி அரிசி -100 கிராம்

உலர்ந்த பேரீச்சம்பழம் - 25 கிராம், அதிமதுரம்-25 கிராம், சுக்குப்பொடி- தேக்கரண்டி, ஏலக்காய்-5, பால் 100 மில்லி பனாங்கற்கண்டு -100 கிராம்.

பார்லி அரிசியை லேசாக வறுத்துப் பொடி செய்து கால் லீற்றர் நீர்விட்டு வேக வைக்கவும். வேகும் போது பேரீச்சம்பழம், அத்திப் பழம்,அதிமதுரம், சுக்குப் பொடி, நசுக்கிய ஏலக்காய் ஆகியவற்றை சேர்த்து நன்றாகக் காய்ச்சி இறக்கி ஆறவைக்க வேண்டும்.

ஆறியவுடன் வடிகட்டி அவற்றுடன் பனங்கற்கண்டும் பாலும் சேர்த்துப் பருக சுவையாக இருப்பது மட்டுமன்றி உடலில் வெப்பம் காரணமாக வருகின்ற குடற்புண், வாய்ப்புண், வாய்நாற்றம், தொண்டைப் புண். வயிறு எரிச்சல் போன்றவை தீரும்.

உலர்ந்த அத்திப்பழங்களில் 4,5 துண்டுகளை எடுத்து இரவில் அத் துண்டுகள் மூழ்கும் அளவிற்கு தண்ணீர் விட்டு இரவு முழுவதும் மூடி வைக்க வேண்டும். காலையில் அந்த நீரை வடித்து அருந்துவதுடன், ஊறிய உலர்ந்த அத்திப் பழத் துண்டுகளை சாப்பிட வேண்டும். செரிமானம் சீராகும். கெட்ட கொலஸ்ரோலை குறைக்கக் கூடியது. மலம் இளகி வெளியேறும். உடல் எடையை ஓரளவிற்கு சீராக்கும். இரத் தத்தை விருத்தி செய்யும். என்புகளைப் பலப்படுத்தக்கூடியது.

### அத்திக் காய்க் கூட்டு


கூட்டிற்கு அத்திப் பிஞ்சு, அத்திக் காய் இரண்டையும் பயன்படுத்தலாம் .பிஞ்சாக இருந்தால் உரலில் போட்டு இரண்டாக தட்டி பயன்ப டுத்தலாம். காயானால் காம்பை ஒடித்து ஒரு நாள் அப்படியே வைதிருப்பது (பால் போக) உரலில் தட்டி பாதியாக்கி நீரில் அலசி விதைகளை நீக்கிய பின்பு பயன்படுத்தலாம். ஒரு மண்சட்டியை போட்டு, தேவையான அளவு நீரும், உப்பும் போட்டு சிறுதீயில் அடுப்பில் வேக வைக்க வேண்டும்.

அதேநேரம் அம்மியில் 3 செத்தல் , சின்னச் சீரகம், மஞ்சள் துண்டு, தேங் காய்ப் பூ சேர்த்து அரைத்து வைத்துக் கொண்டு, ஒரு சிறிய வாணலியில் சிறிது எண்ணெய் விட்டு அரிந்த சிறிய வெங்காயம், செத்தல் மிளகாய், பெருஞ் சீரகம், கடுகு சேர்த்து தாளித்து அரைத்த கூட்டையும் தாளித்ததையும் அவிந்த அத்திக்காய்க்குள் சேர்த்து மூடி அவித்து எடுக்கவும்.

இது அத்திக்காய் கூட்டு எனப்படும் செரிமானத்தையும், அகத்துறிஞ் சலையும் சீராக்கி உண வுக்கால் வாயை பலப்படுத்தக்கூடியதுமாகும்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் உடைப்பெடுத்த குளம் 15 ஏக்கர் வயல் நிலங்கள் பாதிப்பு



(குருமன்காடு)

வவுனியா, ஆசிகுளம் கிராம சேவையாளர் பிரிவுக் குட்பட்ட கோமரசங்குளம் பகுதியிலுள்ள குளமொன்று உடைப்பெடுத்தமையினால் அதன் கீழுள்ள 15 ஏக்கர் வயல் நிலங்கள் நீரில் முழ்கி பாதிப்படைந்துள்ளது.

மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக தொடரும் மழையுடனான காலநிலையினால் பல குளங்களின் நீர்மட்டம் உயர்வடைந்து காணப்பட்ட நிலையிலேயே இக்குளம் நேற்றுக் காலை உடைப்பெடுத்ததையடுத்து ஊர் மக்கள் பல மணி நேரமாக குளத்தின் உடைப்பெடுத்த பகுதியினை மண் நிரப்பி கட்டுப்படுத்த முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் அவை பயனளிக்கவில்லை.

கோமரசங்குளம் பகுதியிலுள்ள இக்குளம் நீண்ட காலமாக எவ்வித புனரமைப்பு பணிகளும் இன்றி காணப்படுவதுடன், குளத்தின் கீழ் 35 ஏக்கர் வயல் நிலங்கள் காணப்படுகின்ற போதிலும் தற்போது 15 ஏக்கர் வயல் நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளது. (நி-6-250)

# தேவிபுரம் துயிலும் இல்லத்தில் சிரமதானம்



(நெளுக்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் தேவிபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் இவ்வாண்டுக்கான மாவீரர் நாள் நிகழ்வுகள் செய்வதற்கான சிரமதான பணிகள் தேவிபுரம் மாவீரர் துயிலும் இல்ல பணிக்குழுவினரால் நேற்று முன்தினம் இடம்பெற்றது. மாவீரர்களுக்கு ஈகைச்சுடர் ஏற்றி அகவணக்கம் செலுத்தியதைத் தொடர்ந்து சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. இவ்வாண்டும் கார்த்திகை 27 மாவீரர் நாள் உணர்வு பூர்வமாக இடம்பெறும் எனவும் அனைத்து மாவீரர் பெற்றோர், உறவுகளையும் கலந்துகொள்ளுமாறும் முன்னாயத்த பணிகளிலும் ஒத்துழைப்பு வழங்குமாறும் பணிக்குழுவினர் தெரிவித்தனர். (நி-6)




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 350 | 350 | 450 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 400 | 450 | 450 | 600 |
| தக்காளி | 260 | 350 | 300 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 100 | 150 | 150 |
| கோவா | 320 | 260 | 300 | 350 |
| கரட் | 450 | 400 | 450 | 500. |
| பூசணி | 100 | 80 | 80 | 120 |
| புடோல் | 240 | 250 | 180 | 250 |
| வாழைக்காய் | 200 | 180 | 180 | 250 |
| சின்ன வெங்காயம் | 380 | 350 | 400 | 450 |
| பெரிய வெங்காயம் | 300 | 260 | 280 | 300 |
| பாகற்காய் | 550 | 400 | 400 | 600 |
| வெண்டக்காய் | 240 | 200 | 180 | 400 |
| கருணைக் கிழங்கு | 140 | 100 | 120 | 200 |
| பயற்றங்காய் | 600 | 450 | 450 | 600 |
| லீக்ஸ் | 280 | 230 | 220 | 300 |
| பீற்றூட் | 200 | 160 | 200 | 300 |
| கறிமிளகாய் | 550 | 360 | 600 | 600 |
| முருங்கைக்காய் | 400 | 500 | 400 | 600 |
| போஞ்சி | 450 | 400 | 400 | 500 |
| கத்தரிதம்புள்ள | 300 | 250 | 350 | 420 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 80 | 150 |
| தேசிக்காய் | 1400 | 1200 | 1400 | 1500 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 90 | 85 | 70-100 |
| இராசவள்ளி | 400 | 450 | 500 | 500 |
| வெங்காயப்பூ | 450 | 350 | -- | 500 |
| முள்ளங்கி | 120 | 150 | -- | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 60 |
| வல்லாரை | 40 | 30 | 40 | 50 |
| ஈரப்பலா | 100 | 150 | -- | 180 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2963


### கம்ஷிகா




### றொமிற்றா




### கயல்



'மரணப்படுக்கையில் இருந்த என் கணவர்கிட்ட, உங்கள் ப்ளட் குருப் என்னன்னு கேட்டேன்; அதுக்கு பதில் சொல்லாம, எனக்கு தைரியம் சொல்லிட்டே இறந்து போய்ட்டாரு'

'என்னன்னு தைரியம் சொன்னார்?'

'பீ பாஸிட்டிவ்னு சொன்னாரு'


### தர்ஷி




### அலைக்ஸ்




### அக்ஷயா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கல்கியின் பாகம் - 2
# பொன்னியின் செல்வன்
### காவியத் தொடர் 328



அப்படி அனைவராலும் புகழப்பட்ட நான், நாகரிகம் இன்ன தென்று தெரியாத ஓர் ஊமைப் பெண்ணை எப்படி அரண்மனைக்கு அழைத்துப் போவேன்? இல்லையென்றால் அவளை என்ன செய்வது - இப்படிப் பலவாறு எண்ணிக் குழம்பிய மனத்துடன் கோடிக்கரை சேர்ந்தேன். அந்த மகராஜி எனக்குக் கஷ்டம் எதுவும் இல்லாமல் செய்து விட்டாள். அங்கே நான் அறிந்த செய்தி என்னை அப்படியே ஸ்தம்பித்துப் போகும்படி செய்துவிட்டது. நாங்கள் அனுப்பிய ஆள்கள் திரும்பிச் சென்ற மறுநாள் அந்தப் பெண் கலங்கரை விளக்கின் உச்சியில் ஏறினாளாம். அன்று அமாவாசைக் காற்று பலமாக அடித்தது. கடல் பொங்கிக் கொந்தளித்து வந்து கலங்கரை விளக்கைச் சூழ்ந்து கொண்டது. அந்தப் பெண் சிறிது நேரம் கொந்தளித்த அலை கடலைப் பார்த்துக் கொண்டே நின்றாளாம். அப்படி அவள் அடிக்கடி நிற்பது வழக்கமாததால் யாரும் அதைப் பொருட்படுத்தவில்லையாம்! திடீரென்று 'வீல்' என ஒரு சத்தம் அலைகடலின் முழக்கத்தையும் மீறிக் கொண்டு கேட்டதாம். பிறகு அவளைக் காணோம்! பெண் உருவம் ஒன்று விளக்கின் ஊச்சியிலிருந்து கடலில் தலைகீழாக விழுந்ததை இரண்டொருவர் பார்த்தார்களாம். படகுகளைக் கொண்டு வந்து ஆனமட்டும் தேடிப்பார்த்தும் பயன்படவில்லை. கொந்தளித்துப் பொங்கிய கடல் அந்தப் பெண்ணை விழுங்கி விட்டது என்றே தீர்மானிக்க வேண்டியிருந்ததாம்.

"இந்தச் செய்தியைக் கேட்டதும் என் நெஞ்சில் ஈட்டியினால் குத்துவது போன்ற வலியும், வேதனையும் உண்டாயின. ஆனால் சற்று நேரத்துக்கெல்லாம் ஒருவித அமைதியும் உண்டாயிற்று. அவளை என்ன செய்வது என்ற கேள்வி இனி இல்லை. அதைப் பற்றி யோசித்து மனத்தைக் குழப்பிக்கொள்ள வேண்டியதுமில்லை!

"துன்பமும், அமைதியும் கலந்த இந்த விசித்திர வேதனையுடன் தஞ்சைக்குத் திரும்பினேன். இராஜ்ய காரியங்களில் மனத்தைச் செலுத்தினேன். போர்க்களங்களுக்குச் சென்றேன். உன் தாயை மணந்து கொண்டேன். வீரப் புதல்வர்களைப் பெற்றேன். உன்னை என் மகளாக அடையும் பாக்கியத்தையும் பெற்றேன்.

"ஆனாலும், மகளே! செத்துப்போன அந்தப் பாவியை என்னால் அடியோடு மறக்க முடியவில்லை. சிற்சில சமயம் என் கனவிலே அந்தப் பயங்கரகாட்சி, நான் கண்ணால் பாராத அந்தக் காட்சி, தோன்றி என்னை வருத்திக் கொண்டிருந்தது. கலங்கரை விளக்கின் உச்சியிலிருந்து ஒரு பெண் உருவம் தலைகீழாகப் பாய்ந்து அலை கடலில் விழும் காட்சி என் கனவிலும் கற்பனையிலும் தோன்றிக் கொண்டிருந்தது. கனவில் அந்தப் பயங்கரக் காட்சியைக் காணும் போதெல்லாம் நான் அலறிப் புடைத்துக் கொண்டு எழுந்திருப்பேன். பக்கத்தில் படுத்திருப்பவர்கள் 'என்ன? என்ன?' என்று கேட்பார்கள். உன் தாயார் எத்தனையோ தடவை கேட்டதுண்டு. ஆனால் நான் உண்மையைக் கூறியதில்லை. 'ஒன்றுமில்லை' என்று சில சமயம் சொல்வேன். அல்லது போர்க்கள பயங்கரங்களைக் கற்பனை செய்து கூறுவேன். நாளடைவில் காலதேவனின் கருணையினால் அந்தப் பயங்கரக் காட்சி என் மனத்தை விட்டு அகன்றது அவளும் என் நினைவிலிருந்து அகன்றாள் அகன்று விட்டதாகத் தான் சமீப காலம் வரையில் நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் உயிரோடிருப்பவர்களைக் காட்டிலும் செத்துப் போனவர்கள் அதிகக் கொடுமைக்காரர்கள் என்று தோன்றுகிறது.

மகளே! ஊமைச்சியின் ஆவி என்னைவிட்டுவிடவில்லை. சில காலமாக அது மீண்டும் தோன்றி என்னை வதைக்க ஆரம்பித்திருக்கிறது! என் மகளே! மாண்டவர்கள் மீண்டு வருவார்கள் என்று நீ நம்புகிறாயா?"

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## விநோத பறவையால் வாழ்ந்தது யார் வீழ்ந்தது யார்





ரஞ்சனியோட அம்மா வேணி ஒரு பெரிய பணக்கார வீட்டில் வேலை செய்துட்டு வந்தாங்க. அங்க வேலை முடிஞ்சதும் கொடுக்குற சிறிய அளவு அரிசியை வைத்து அவங்க ரெண்டுபேரோட அன்றாட வாழ்க்கையை கழித்தார்கள். வேணி ஒருநாள் வேலைக்கு போகவில்லை என்றாலும் இருவரும் பட்டினிதான் இருப்பார்கள். வேணியும், ரஞ்சனியும் கிடைப்பதை வைத்து எளிய வாழ்க்கையாக இருந்தாலும் சந்தோசமாக வாழந்து வந்தார்கள்.

குட்டி பொண்ணு ரஞ்சனி அம்மா கஷ்டபடுறாங்க அப்படின்னு பெருசா ஆசைபட்டு எதுவும் கேட்டுக்கிட்டது இல்லை. மகளுக்காக வேணியும் விடாமல் வேலைக்கு சென்று விடுவாள். தினமும் கொண்டு வரும் அரிசியை உலர்த்தி பிறகு சமைத்து சாப்பிடுவார்கள். அன்று வேணி அடுத்த நாளுக்கான அரிசியையும் சேர்த்து கொண்டு வந்திருந்தாள். அதில் கொஞ்சம் வண்டுகள் இருந்ததால், வெயிலில் நன்றாக காய வைத்துதான் சமைக்க வேண்டும் என்றாள் வேணி. முற்றத்தில் துணியை விரித்து உலர்த்த வைத்து விட்டு மகளிடம் ஒரு குச்சியை கொடுத்து பாதுகாத்துக்கொள் என்று வேலை ...

அவளும் அமைதியாக அமர்ந்து இருந்தாள். அப்போது ஒரு சிட்டு குருவி அவள் அருகில் வந்து நின்றது. அதை பார்த்ததும் 2 அரிசிகளை கொடுத்தால் அதுவும் மகிழ்ச்சியாக பறந்து சென்றது. சிறிது நேரத்தில் ஒரு வயதான காகம் அவள் அருகில் வந்தது. பார்ப்பதற்கு அது மிகவும் சோர்வடைந்து இருப்பதை உணர்ந்தாள் ரஞ்சனி. சரி கொஞ்சம் தானே என காகத்திற்கு அரிசியை கொடுத்தாள்.

இந்தமுறை அவள் உயரத்திற்கு தங்க சிறகுகளை கொண்ட ஒரு பறவை வந்து நின்றது. அது தனது தலையை தொங்க போட்டு கொண்டு, எனக்கு மிகவும் பசியாக இருக்கிறது. எங்கு தேடியும் உணவு கிடைக்கவில்லை என்றது. அந்த பறவை பேசியதை பார்த்து அதிர்ந்த ரஞ்சனி, என்னிடத்தில் இவவளவு தான் தானியம் இருக்கிறது. என் அம்மா மிகவும் கடின பட்டு இதை ஈட்டுகிறார்கள். உன்னை பார்த்தாலும் பாவமாகத்தான் இருக்கிறது. சரி கொஞ்சமாக சாப்பிட்டு கிளம்பிவிடு என் அம்மா வரும் நேரம் ஆகி விட்டது என்றாள். கண் மூடி திறப்பதற்குள் மொத்த அரிசியையும் காலி செய்தது அந்த பறவை. ரஞ்சனி என்ன இப்படி செய்துவிட்டாய், என் அம்மாவிடம் என்ன சொல்ல போகிறேன் என வருந்தினாள். பறவை என்னை மன்னித்துவிடு பசி மிகுதியால் யோசிக்காமல் சாப்பிட்டு விட்டேன். என் வீடு அருகில் தான், உன் அம்மா கோபப்படாமல் இருக்க உனக்கு நான் தருகிறேன். அதை வைத்து உன் அம்மாவை சமாதானம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கொடுமைகளுக்கு இடையே
உண்மை வெற்றி பெறும்.

– ஸ்ரீ அன்னை

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இராமாயணம் பெண்ணுக்கான போர் மகாபாரதம் மண்ணுக்கான போர்

இராமாயணம், மகாபாரதம் ஆய இதிகாசங்கள் மனித சமூகத்தை வழிப்படுத்துவதற்கானவை.

அதாவது மனிதப் பிறவி எடுத்தவர்கள் இறைவனைப் புரிந்து கொண்டு தர்மத்தின் வ்ழியில் தங்கள் வாழ்வியலைத் தொடர வேண்டும்.

மாறாக அதர்மத்தின் வழியில் ஆணவச் செருக்கோடு நடந்து கொண்டால், அழிவு உறுதி என்பதை உணர்த்துகின்ற இதிகாசங்களை நாம் கற்றறிய வேண்டும்.

அவ்வாறு இராமாயணம், மகாபாரதம் எனும் இதிகாசங்களைக் கற்றறியும்போது, அவை எடுத்தியம்புகின்ற தத்துவங்கள் எங்கள் வாழ்க்கைப் பயணத்துக்குப் பேருதவியாக அமையும்.

அந்தவகையில் இராமாயணம் எனும் இதிகாசம் ஒரு பெண்ணுக்காக இடம்பெற்ற போரை இயம்புவது. தவிர அது ஒரு பெண்ணினால் ஏற்பட்ட போரும் கூட.

ஆம், இராவணன் எனும் இலங்கை வேந்தன் சீதாப் பிராட்டியை கடத்திச் சென்று அசோகவனத்தில் சிறை வைத்ததன் காரணமாக இராமபிரான் தன் சேனைகளுடன் இலங்கைக்கு வந்து போர் புரிய வேண்டியதாயிற்று.

இராமாயணப் போரால் இரு தரப்பிலும் மாண்டவர்கள் ஏராளம்.

அதிலும் இயக்கர் குலத் தலைவனாகிய இராவணனின் சந்ததி மாண்டு போனது.

அந்தோ! இராவணனின் புத்திரன் இளவரசன் இந்திரஜித்தை இலங்காபுரி பறிகொடுத்தது.

நாகர் குலத் தலைவி மண்டோதரியை இந்த மண் இழந்து போனது.

இதற்கும் மேலாக, புயவல்லமை கொண்டவனும் அறம் உணர்ந்தவனுமாகிய கும்பகர்ணன் அநியாயமாக உயிரிழந்தான்.

கற்புடைத்தேவி சீதையை விட்டிடு என்று தன் அண்ணனுக்கு அறத்தை உரைத்த கும்பகர்ணன் போர்க்களத்தில் உயிரிழந்து போவதென்பது மிகப்பெரிய கொடுமை. ஆனாலும் அது நடந்தாயிற்று.

இவையாவற்றுக்கும் மேலாக, அழகிய இலங்காபுரி எரியூட்டப்பட்டது.

இவ்வாறு மிகப்பெரிய உயிரிழப்புகள் ஏற்பட்டதாயினும் சீதை சிறை மீண்டதைத் தவிர வேறு எதுவும் இராமாயண யுத்தத்தால் நடந்தாகவில்லை.

ஆக, சூர்ப்பனகை என்னும் பெண்ணால் விளைந்த போர் சீதை எனும் பெண்ணை மீட்டதோடு முற்றுப் பெற்றது.

ஆக, இராமாயணம் என்பது ஒரு பெண்ணுக்காக நடந்த போர்.

மாறாக மகாபாரதப் போர் மண்ணுக்காக நடந்தது.

ஆம், கௌரவர் தலைவன் துரியோதனன் பாண்டவர்களுக்கு உரித்தான ஆட்சியை கபளீகரம் செய்தமையால், நாட்டை மீட்டெடுப்பதற்கான போரை பாண்டவர்கள் நடத்தினர்.

அங்கும் பேரழிவு. ஏன்? பாண்டவர்களின் புத்திரர்கள் கூட, கொல்லப்பட்டனர். கௌரவர் சேனை அழிந்தது. ஈற்றில் மண் மீட்பு மட்டுமே நடந்தது.

இப்போது ரஷ்யா – உக்ரைன் போர் மற்றும் இஸ்ரேல் காசா மீது நடத்துகின்ற தாக்குதல் அனைத்தும் மண்ணுக்காக நடத்துகின்ற போர் என்பது புரிதற்குரியது.

அதிலும் வேடிக்கை என்னவென்றால் காசாவை நிர்மூலமாக்கும் இஸ்ரேல் கூறுகிறது காசாவை நாங்கள் ஆக்கிரமிக்கப் போவதில்லை என்று.

இங்குதான் மண்ணுக்கான போரின் அர்த்தமற்றதன்மை புலப்படுத்தப்படுகிறது.

என்ன செய்வது பெண்ணாசை, மண்ணாசை எனும் இரண்டும் சேர்ந்து மனிதர்களைக் கொன்றொழிக்கின்ற செயல் இருக்கிறதே அதுதான் பெருங் கொடுமை.

# பகிரங்க மன்னிப்பு கோரிய இலங்கை கிரிக்கெட் அணித் தலைவர்

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் அணியின் தலைவர் குசல் மெண்டிஸ் நாட்டு மக்களிடம் மன்னிப்பு கோரியுள்ளார்.

உலகக் கிண்ண ஒரு நாள் கிரிக்கட் போட்டியில் பங்குபற்றிய இலங்கை அணியுடன் நேற்றுக் காலை கிரிக்கட் நிறுவனத்தில் இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் கிரிக்கெட்டை நேசிக்கும் மக்களிடம் இலங்கை கிரிக்கெட் அணி மன்னிப்புக் கோருவதாக அணித் தலைவராக அவர் தெரிவித்தார்.

மேலும், உலகக் கிண்ணப் போட்டியின் போது இலங்கை அணிக்கு அச்சுறுத்தல் அல்லது வெளி அழுத்தங்கள் எதுவும் இல்லை என இலங்கை அணியின் தலைவர் குசல் மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணிக்கு எதிரான போட்டிகளில் குறைந்த ஓட்டங்களில் இலங்கை அணி மாத்திரம் தோல்வியடையவில்லை என்று கூறிய அவர், தற்போது இந்திய அணி அனைத்து அம்சங்களிலும் முன்னிலையில் உள்ளது என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

2023 உலகக் கிண்ண ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளில், இலங்கை அணி பல போட்டிகளில் மிகவும் மோசமான முறையில் விளையாடி பல கசப்பான தோல்விகளை தொடர்ந்து பெற்றது.

அதனை தொடர்ந்து இலங்கை கிரிக்கெட்டின் உறுப்புரிமையை சர்வதேச கிரிக்கெட் பேரவை உடன் நடைமுறைக்கு வரும் வகையில் தடை செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## திருகோணமலையில் நிலநடுக்கம்

(திருமலை)

திருகோணமலை பகுதியில் நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளதாக புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 3.4 ஆக பதிவாகியுள்ளதாக அந்த பணியகம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

நேற்று பிற்பகல் 1.15 மணியளவில் இந்த நிலநடுக்கம் பதிவாகியுள்ளது.

திருகோணமலை மொறவெவ பிரதேசத்தில் இந்த நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளதாக மேலதிக தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி-6)

## விசுவமடுவில் அதிகரிக்கும் திருட்டுக்களால் மக்கள் அச்சம்

(தருமபுரம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் விசுவமடுப் பகுதியில் அதிகரிக்கும் திருட்டுச் சம்பவங்களால் அப்பகுதி மக்கள் அச்சம் அடைந்துள்ளனர்.

சில நாட்களாக வீட்டில் ஆட்கள் இல்லாத சமயம் பார்த்து வீட்டில் உள்ள பொருட்கள் களவு போகும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

வீட்டில் தனியாக இருக்கும் முதியவர்களை இலக்கு வைத்து குறித்த சம்பவங்கள் இடம் பெற்றுள்ளது.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் பொலிஸார் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

(நி-6-316)

## கப்பம் பெற முயன்ற கிராம சேவகர் கைது

ஹோமாகம பிட்டிபன பகுதியில் முன்பள்ளி ஆசிரியர் ஒருவரை அச்சுறுத்தி 20 இலட்சம் ரூபாவை கப்பமாக பெற முயன்ற கிராம உத்தியோகத்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தமது மூன்று பிள்ளைகளையும் கொலை செய்து விடுவதாக தம்மை அச்சுறுத்தி நபர் ஒருவர் கப்பம் கோரியதாக ஹோமாகம பொலிஸ் நிலையத்தில் ஆசிரியர் ஒருவர் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்தசம்பவத்தில், ஹோமாகம பகுதியைச் சேர்ந்த கிராம உத்தியோகத்தர் ஒருவரே நுகேகொடை குற்றப் பிரிவினரால் கைது செய்யப பட்டுள்ளார். (7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை **செவ்வாய்க்கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை** அறுகுவெளி, மறவன் புலவு, தனங்கிளப்பு ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் அரசன் அரிசி ஆலை, மூன்று முறிப்பு ஆகிய பிரதேசத்திலும் மின்சாரம் தடைப்படும்.

## வடமாகாண மரநடுகை மாதம்
## கார்த்திகை - 2023

**"நீங்கள் வலிமை, பொறுமை ஆகியவற்றின் அருமையை உணர்வீர்களாயின் மரங்களின் சகவாசத்தை வரவேற்பீர்கள்"**

*- ஹால் போர்லாண்ட் (அமெரிக்க இயற்கையியலாளர்)*

## மின் கட்டண உயர்வுக்கு எதிராகப் போராட்டம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மின்சார கட்டணம் அதிகரிப்பு மற்றும் பொருளாதார நெருக்கடிகளை முடிவுக்கு கொண்டுவருமாறு வலியுறுத்தி நேற்று முன்தினம் மாலை தீப்பந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட தொகுதி அமைப்பாளர்களால் தீப்பந்த போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது

மின்கட்டண அதிகரிப்பை ஏற்படுத்தி ஏழைகளின் வயிற்றில் அடிக்காதே, மின்கட்டணத்தை கூட்டாதே, ரணில் ராஜபக்ஷவை கண்டிக்கின்றோம் போன்ற கோசங்களும் போராட்டத்தின் போது எழுப்பப்பட்டன.

(நி-6)

## பதுளையில் மண்சரிவு இருவர் உயிரிழப்பு

(பதுளை)

பதுளை பகுதியொன்றில் அமைந்துள்ள வீடுகள் மீது மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் இருவர் உயிரிழந்துள்ளதாக ஹாலிஎல பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் ஹாலிஎல, ரொக்கதென்ன தோட்ட பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

குறித்த விபத்தில் காயமடைந்தவர்கள் பதுளை ஆதார வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அனுமதிக்கபட்ட நிலையில் இருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர்.

மண்மேடு சரிந்து வீழ்ந்ததில்4 வீடுகள்சேதமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (நி-6)

## தொலைபேசி அழைப்புகள் மூலம் அதிகரிக்கும் பணமோசடிகள்
### பொலிஸ் ஊடகப் பிரிவு

(கொழும்பு)

தொலைபேசி அழைப்புகள் மூலம் பண மோசடி செய்யும் சம்பவங்கள் இடம் பெறுவது தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.

எனவே, இவ்வாறான தொலைபேசி அழைப்புக்களை நம்பி பணத்தை கொடுத்து மோசடி நடவடிக்கைகளில் சிக்க வேண்டாம் எனவும் பொதுமக்களிடம் கேட்டுக்கொள்ளப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

தெரியாத ஒரு நபரிடமிருந்து இது தொடர்பில் தொலைபேசி அழைப்பு வந்தால் அதனைச் சரிபார்ப்பதுடன் அவதானமாக செயற்பாடுமாறும் அவர் தெரிவித்தார்.

(நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாலைத் தீவில் 'இந்தியாவே வெளியேறு' முழக்கத்துடன் சீனசார்பு முகமது முய்ஜு ஜனாதிபதியாகத் தெரிவு

05

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



முன்னாள் ஜனாதிபதி நஷீத் முதல் சுற்றில் அதிக வாக்குகளைப் பெற்றார். ஆனால் உச்ச நீதி மன்றம், சர்வ தேச தேர்தல்பார்வையாளர்களின் நேர்மறையான மதிப்பீட்டை மீறி அதை ரத்து செய்தது. மீண்டும் நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் முன்னாள் ஜனாதிபதி மௌமூனின் ஒன்று விட்ட சகோதரர் அப்து ல்லா யாமீன் ஜனாதிபதியாக பதவியேற்றார்.

### அப்துல்லா யாமீன்

அப்துல்லா யாமீன் அப்துல் கையூம் பொதுவாக அப்துல்லா யாமீன், மாலைத்தீவின் அரசியல் வாதியும் மாலைத்தீவுகள் குடியரசின் முன்னாள் அரசுத் தலைவரும் ஆவார். இவர் முன்னாள் அரசுத் தலைவர் மாமூன் அப்துல் கையூமின் ஒன்று விட்ட உடன் பிறப்பாகும்.



அப்துல்லா யாமீன்

மாலைதீவுகள் முன்னேற்றக் கட்சியின் (Progressive Party of Maldives) வேட்பாளராக 2013 ஆம் ஆண்டுநடந்த அரசுத் தலைவர் தேர்தலில் மாலை தீவுகள் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளரும் முன்னாள் அரசுத் தலைவருமான மொகமது நசீத்தை தோற்கடித்து அரசுத் தலைவரானார். அரசியலைத் தவிர, யாமீன் தலைநகர் மாலேயில் தான் வளர்ந்த மச்சன் கோலி வட்டாரத்தில் சமூக ஒருங்கிணைப்பாளராக பங்காற்றி உள்ளார். மக்கள் கூட்டணி என்ற கட்சி உருவாக்கத்திற்கு பாடுபட்ட யாமீன் பின்னர் அதிலிருந்து விலகி 2010 இல் மாலைதீவுகள் முன்னேற்றக் கட்சியில் இணைந்தார். இக் கட்சியின் பாராளுமன்ற குழுத் தலைவராக யமீன் பணியாற்றினார்.

1993 நவம்பரில் இவர் வணிக, தொழிற்றுறை அமைச்சராக நியமிக்கப்பட்டார். 2005 - 2007 காலகட்டத்தில் உயர் கல்வி, வேலை வாய்ப்பு, சமூக பாதுகாப்பு அமைச்சராகவும் 2008 இல் சுற்றுலா மற்றும் விமானத்துறை அமைச்சராகவும் பொறுப் பேற்றுள்ளார்.

2013 இல் அரசுத் தலைவர் தேர்தல் 2012 இல் அரசுத் தலைவராக இருந்த நசீமின் பதவி விலகல் தொடர்பான சர்ச்சைகளுக்கிடையே நடைபெற்றது. இந்தத் தேர்தலில் முதல் சுற்றில் நசீதுக்கு 45.45% வாக்குகளும் யமீனுக்கு 25.35% வாக்குகளும் கிடைத்தது. இரண்டாம் சுற்றுத் தேர்தலில் யமீனுக்கு 51.39% வாக்குகளும் நசீதுக்கு 48.61% வாக்குகளும் கிடைத்தன. இதனால் யாமீன் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டார். இந்த முடிவை எதிர்கட்சிகள் எதிர்த்தன. தகுதியற்ற பல வாக்காளர்கள் இரண்டாம் சுற்றின் போது சேர்க்கப்பட்டதால் மாலைத்தீவுகளின் உச்ச நீதிமன்றம் துவக்கத்தில் இரண்டாம் சுற்றுத் தேர்தலை இரத்து செய்திருந்தது.

யாமீன் அரசுத் தலைவராக இருந்த காலத்தில் பல பொருளாதார சீர்திருத்தங்களை முன்வைத்தார். முதல் முறையாக மாலைத் தீவுகளில் வெளிநாட்டினர் நிலம் வாங்க அனுமதித்தார். சீன மக்கள் குடியரசுடன் நெருக்கமான தொடர்பை விரும்பிய யாமீன் சீனாவின் கடல்சார் பட்டுச்சாலைத் திட்டத்தை ஆதரித்தார். தவிரவும் மாலைத் தீவுகளில் சீனாவின் மற்றும் பிற நாடுகளின் மூலதனத்தை வரவேற்றார்.

சீனச் செல்வாக்கின் கீழ், மாலை தீவில் சீனாவின் பினாமியாகச் செயற்பட்ட அவர், சீன நிறுவனங்களுக்கு பல உட்கட்டமைப்புத் திட்டங்களை வழங்கி, சீனாவுடன் ஒப்பந்தங்களில் நுழைந்தார், தீவு நாட்டின் இறையாண்மையைக் குறைமதிப்புக்கு உட்படுத்தியது. இதன் காரணமாக தீவு நாடு சீனாவிடம் பெரும் கடனில் சிக்கியுள்ளதாக மாலைதீவுகள் குரலின் செய்தி அறிக்கை கூறுகிறது. மாலைதீவின் உள்நாட்டு அரசியலிலும் சீனாவின் தலையீடு யாமீன் ஆட்சியின் கீழ் தலையெடுத்தது. யாமீனின் ஆட்சி பல ஜனநாயக நடைமுறைகளைத் தகர்த்து மாலைதீவின் சர்வாதிகார ஆட்சியாளராகச் செயற்பட்டதன் மூலம் மாலத்தீவின் ஜனநாயகத்தையும் கீழறுத்தது

முன்னாள் அரசுத் தலைவர் மோகமது நசீதையும் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் மொகமது நசீமையும் கைது செய்து சிறையில் அடைத்ததற்காக எதிர்கட்சிகளாலும் வெளிநாட்டுத் தலைவர்களாலும் யாமீன் விமர்சிக்கப்பட்டார்.அரசியல் காரணங்களுக்காக பொய்க் குற்றம் சாட்டி இவர்களை சிறையில் அடைத் திருப்பதாக குற்றம் சாட்டினர். இதனை யாமீன் மறுத்திருந்தார்.

2015 ஆம் ஆண்டின் பிற் பகுதியில் ஒரு படுகொலை முயற்சியில் இருந்து யாமீன் தப்பினார். பின்னர் துணைத் தலைவர் அகமது அதீப் 17 ஆதரவாளர்களுடன் "பொது ஒழுங்கு குற்றங்களுக்காக" கைது செய்யப்பட்டார் மற்றும் அவரது கூட்டாளிகளுக்கு எதிராக அரசாங்கம் ஒரு பரந்த ஒடுக்கு முறையை கையாண்டது. திட்டமிடப்பட்ட அரசாங்க எதிர்ப்பு பேரணிக்கு முன்னதாக அவசரகால நிலை அறிவிக்கப்பட்டது. பின்னர் அதீப் அகற்றப்பட்டார்.

பயங்கர வாதம் மற்றும் ஊழல் குற்றச் சாட்டுகள் மீதான தண்டனை நிராகரிக்கப்பட்ட பின்னர், ஜூலை 2019 இல் மாலேயில் உள்ள நீதி மன்றங்களால் அதீப் விடுவிக்கப்பட்டார், ஆனால் ஊழல் மற்றும் பண மோசடி வழக்கில் அரசு வழக்கறிஞர் இந்த உத்தரவை எதிர்த்து மேல் முறையீடு செய்ததால் பயணத்தடை விதிக்கப்பட்டது. அதீப் இந்தியாவில் அடைக்கலம் தேடி இழுவை படகில் தப்பினார்.

அதிபர் யாமீன் அரபு நாடுகளுடன் நெருக்கமாக இருந்ததால் இத் தொடர்பு மூலமாக மாலைத் தீவுகளுக்கு பல்வேறு நலத்திட்டங்களை ஈர்த்திருக்கிறார். பாலஸ்தீனத்திற்கு ஆதரவான நிலை கொண்டிருந்தார். அவர்கள் ஐக்கிய நாடுகள் அவையில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு அவரது அரசு ஆதரவளித்துள்ளது. கிழக்கு, ஆசிய பசுபிக், அராபிய நாடுகளுடனான சுமுகமான நட்புறவால் நாட்டிற்கு பல கோடி ரூபாய் மதிப்புள்ள திட்டங்களை ஈர்த்துள்ளார். யமீனின் பொருளாதாரக் கொள்கைகளை உலக வங்கியும் அனைத்துலக நாணய நிதியமும் பாராட்டியிருந்தன. இவரது பதவிக்காலம் 2013 இல் இருந்து 2018 ஆம் ஆண்டு வரையாகும்.

### இப்ராகிம்முகமது சோலிஹ் (Ibrahim Mohamed Solih)


இப்ராகிம்முகமது சோலிஹ் (Ibrahim Mohamed Solih) என்பவர் மாலைதீவுகள் அரசியல்வாதி ஆவார். 2018 ஆம் ஆண்டில் மாலைத் தீவுகளில் நடைபெற்ற அதிபர் தேர்தலில் அப்போதுஅதிபர் பதவிவகித்த அப்துல்லாயாமீனை வெற்றி பெற்று நவம்பர் 17,2018 இல் அதிபராக பெறுபேற்றார்.

இவர் தனது 30 ஆம் வயதில் சொந்த தொகுதியான ஃபாதிப் பொகுவில் இருந்து 1994 ஆம் ஆண்டில் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்வானார்.

மாலைதீவுகள் விடுதலைக் கழகத்திலும் (எம்டிபி) 2003 முதல் 2008 வரை நடைபெற்ற மாலை தீவுகள் அரசியல் சீர்திருத்த நடவடிக்கைகளிலும் இவரின் பங்கு மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. இந்த சீர்திருத்த நடவடிக்கைகளின் மூலம் நவீனத்துவ அரசியலமைப்பு மற்றும் பல கட்சி ஜனநாயகம் போன்றவற்றை வரலாற்றிலேயே இந்தக் கட்சி முதல் முறையாக ஏற்றுக் கொள்ள வழி வகை செய்யப்பட்டது. பாராளுமன்ற உறுப்பினர்களிலேயே மூத்த உறுப்பினராகவும் நாட்டுச் சட்டமாமன்றத்திலும் செயற்பட்டு வந்தார்.

சோலிஹ் மாலைதீவின் 7 ஆவது ஜனாதிபதியாகவும், முகமது நஷீத் மற்றும் அப்துல்லா யாமீனைத் தொடர்ந்து நாட்டின் மூன்றாவது ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதியாகவும் ஆனார். மாலேவின் தலைநகருக்கு வெளியே பிறந்த முதல் மாலைத் தீவு ஜனாதிபதி சோலிஹ். அதே போல் 54 வயதில் ஜனாதிபதியாக பதவியேற்ற இரண்டாவது வயதான நபர் ஆவார், பதவியேற்கும் போது முகமது வஹீத்ஹாசன் மட்டுமே வயதானவராக இருந்தார்.

2018 நவம்பர் 19 அன்று, மாலைதீவு காமன்வெல்த் நாடுகளில் மீண்டும் இணைவதாக சோலி அறிவித்தார். இது அவரது அமைச்சரவையால் பரிந்துரைக்கப்பட்ட முடிவு. 1982 முதல் 2016 வரை காமன்வெல்த் நாடுகளில் மாலைதீவு ஒரு குடியரசாக இருந்தது. 2016 இல் காமன்வெல்த் கூட்டமைப்பிலிருந்து விலகிக் கொள்வதாக மாலைதீவு அறிவித்திருந்தது. 1 பெப்ரவரி 2020 அன்று மாலைதீவு மீண்டும் காமன்வெல்த்துடன் சேர்ந்து கொண்டது.



இப்ராகிம் முகமது சோலிஹ்

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடன்களை...

மற்றொரு காரணம் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச கொள்கைகளை உருவாக்கும்போது இது தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும். சர்வதேச அரங்கில் எமது கோட்பாடுகளுக்கு அமைய ஆற்றல்மிக்க அடையாளத்தை உருவாக்க வேண்டும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

தற்போது மேற்கத்தேய நாடுகள் பயன்படுத்தும் மூலோபாயங்கள் முன்னரை விட வேறுபட்டவை. இன்று அவற்றை ஆக்கிரமிப்பு என கூறுவது இல்லை. அதனை கடன் வழங்குதல் என குறிப்பிடுகின்றனர்.

நிபந்தனைகளுடன் கடன்கள் வழங்கப்படுகின்றன. இந்த நிபந்தனைகள் இலகுவானதாக இருந்த போதிலும் அதனால் நாம் பொருளாதார ரீதியாக நசுக்கப்படுகின்றோம்.

அதற்கு மற்றுமொரு பெயரே அபிவிருத்திக்கான முதலீடு.

எனவே தேசிய வளங்களையும் பொருளாதாரத்தையும் கலாசார பாரம்பரியத்தையும் பாதுகாக்கும் வகையில் எமது சர்வதேசக் கொள்கைகள் அமையப் பெறுவது அவசியம் எனவும் சுட்டிக்காட்டினார். (ந-7)

## பாராளுமன்றில்...

யாடலில் நிதி இராஜாங்க அமைச்சர்களான ரஞ்சித் சியம்பலாபிட்டிய, ஷெஹான் சேமசிங்க, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பொருளாதார விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க, ஜனாதிபதியின் ஆலோசகர் சமன் அதாவுத ஹெட்டி, நிதி அமைச்சின் செயலாளர் மகிந்த சிறிவர்தன, மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, ஜனாதிபதி ஊடகப் பணிப்பாளர் நாயகம் தனுஷ்க ராமநாயக்க, ஜனாதிபதியின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் மதுஷங்க திசாநாயக்க ஆகியோர் கலந்துகொண்டனர்.

2024ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டம் இன்று நண்பகல் 12 மணிக்கு நிதி அமைச்சரும் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்கவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் படவுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிதி அமைச்சை பொறுப்பேற்றதன் பின்னர் சமர்ப்பிக்கின்ற இரண்டாவது வரவு செலவு திட்டம் இதுவாகும்.

இம்முறை வரவு - செலவு திட்டத்தில் அரச ஊழியர்களுக்கான சம்பள உயர்வு, வசதி குறைந்த மக்களுக்கு நிவாரண திட்டங்கள், தொழில் முயற்சியாளர்களுக்கான கடன் வசதிகள் என பல முன்மொழிவுகள் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றன.

அத்துடன் அரசாங்கத்துக்கு வருமானத்தை அதிகரித்துக்கொள்ள வரி அதிகரிப்பும் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் வரவு - செலவுத்திட்ட விவாதம் செவ்வாய்க்கிழமை 14ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை ஞாயிறு தினம் தவிர்ந்து 7 நாட்கள் இடம்பெறும்.

அத்துடன், வரவு செலவுத்திட்ட இரண்டாம் மதிப்பீடு மீதான வாக்கெடுப்பு எதிர்வரும் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 6.00 மணிக்கு இடம்பெறும்.

அதனையடுத்து, குழுநிலை விவாதம் எதிர்வரும் 22ஆம் திகதி புதன்கிழமை முதல் டிசம்பர் 13 ஆம் திகதி புதன்கிழமை வரை ஞாயிறு தினம் தவிர்ந்து 19 நாட்கள் இடம்பெறவுள்ளது.

இதற்கமைய, 2024 நிதியாண்டுக்கான வரவு - செலவுத்திட்ட மூன்றாம் மதிப்பீடு மீதான வாக்கெடுப்பு டிசம்பர் 13 ஆம் திகதி புதன்கிழமை மாலை 6:00 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ந-7)

## பயங்கரவாத...

வித்தார்.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் சம்பந்தமாக சிவில் மற்றும் இதர தரப்புக்களுடன் கலந்துரையாடும் செயற்பாடுகளுக்காக அதனை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் செயற்பாடுகள் தாமதப்படுத்தப்பட்டுள்ளன.

தற்போது அந்தச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு, சிவில் அமைப்புகளின் அபிப்பிராயங்கள் மற்றும் முன்மொழிவுகள் அனைத்தும் உள்ளடக்கப்பட்டே வரைவு இறுதி செய்யப்பட்டுள்ளது என்றும் கூறியுள்ளார். (ந-7)

## வாகன விபத்தில்...

கிள் கட்டுப்பாட்டினை இழந்து மதகுடன் மோதியதில் குறித்த விபத்து சம்பவித்துள்ளது.

இதில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற உசன் மிருசுவில் பகுதியைச் சேர்ந்த 56 வயதான நபரே சம்பவ இடத்தில் பலியாகியுள்ளார்.

மேற்படி விபத்துச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ந-7,30)

## ஜனாதிபதியால்...

அவர்,

ஐக்கிய மக்கள் சக்தி தற்போது நாட்டிற்கு தேவையான டொலர்களை கொண்டு வரும் நிலையான வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது.

குடும்ப அலகின் வருமான செலவினம் அடங்கலான சனத்தொகை கணக்கெடுப்பே முதலில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றாலும் அது மேற்கொள்ளப்படவில்லை.

இதன் காரணமாக உலக வங்கியில் இருந்து பெறப்பட்ட பணம் எந்த அறிவியல் பின்புலமும் இல்லாமல் பகிர்ந்தளிக்கப்பட்டது.

இதன் பின்னரே தற்போது சனத்தொகை கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது. இந்நாடு நல்ல பாதையில் செல்ல முடியும் என்றாலும், எடுக்கும் ஒவ்வொரு திட்டங்களையும் ஆதாரம் மற்றும் தரவுகளின் அடிப்படையில் அறிவியல் பூர்வமாக செயற்படுத்த வேண்டும்.

அவ்வாறின்றி நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப முடியாது என்றும் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். (ந-7)

## சம்பந்தரின்...

விக்கிரமசிங்க இன்று நிறை வேற்று அதிகாரத்தில் இருக்கின்ற போதிலும் இன்றுவரை தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை வழங்குவது தொடர்பாக எந்தவொரு காத்திரமான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படாமை தமிழ் மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் அடுத்த தீபாவளிக்கு முன்னர் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை பெற்றுத் தருவதாகக் கடந்த 2016ஆம் ஆண்டு இரா.சம்பந்தன் வழங்கிய உறுதிமொழி தொடர்பாகவும் - இவ் வருடம் முன்வைத்துள்ள உணர்ச்சிகரமான கருத்து தொடர்பிலும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளார். (ந-7)


கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3538 — சீட்டிழுப்பு திகதி 12.11.2023 — O 13 15 22 75 — O — 41039

தன நிதானய — திகதி 2023.11.12 — சீட்டிழுப்பு இலக்கம் 1326 — F 21 31 34 63 F — 47923

Lucky 7 — திகதி 12.11.2023 — சீட்டிழுப்பு இலக்கம் 0122 — L7 இலக்கம் 01 — கன்னி 4 0 8 8 9 5

HANDAHANA — சீட்டிழுப்பு திகதி 2023.11.12 — சீட்டிழுப்பு இலக்கம் 0605 — துலாம் 31 38 51 61 துலாம் — 34718 — 24

மெகா பவர் — திகதி 12/11/2023 — சீட்டிழுப்பு இலக்கம் 1644 — I 03 15 18 24 51 — 51095

மஹஜன சம்பத — திகதி 2023/11/12 — சீட்டிழுப்பு இலக்கம் 5296 — M 0 4 1 3 6 1

சுபிரி தன சம்பத — திகதி 12.11.2023 — வெற்றி வாரம் 004 — V 2 6 6 7 9 7 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 20,950,252.80 — DLB

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2270 — வர்ணம் செம்மஞ்சள் — சீட்டிழுப்பு திகதி 2023.11.12 — தினம் ஞாயிற்றுக்கிழமை — 42 48 50 51 P — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 55,837,932/-

சனிதா — திகதி 2023.11.12 — வெற்றி வாரம் 4431 — 16 32 34 70 H — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.63,623,236.00

சசிரி — வெற்றி வாரம் 401 — சீட்டிழுப்பு திகதி 2023.11.12 — 26 37 39 — கபிலம் — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,980,280/-

ராசி — சீட்டிழுப்பு வாரம் 3982 — வர்ணம் ஊதா — சீட்டிழுப்பு திகதி 2023.11.12 — தினம் ஞாயிற்றுக்கிழமை — 13 28 36 43 துலாம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 5,088,924/-

ஜய — D 36 16 28 50 70 — 1446 — மஞ்சள் — 2023.11.12 ஞாயிறு — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 464,142,994.20

அட கோட்டிபதி — ஞாயிற்றுக்கிழமை — வெற்றி வாரம் 2096 — வர்ணம் இளம் பச்சை — சீட்டிழுப்பு திகதி 2023.11.12 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 68,606,624/- — 02 28 54 74 U


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

VILLAGE HOTEL
பஸ் சேவை
JAFFNA EXPRESS
AIRPORT PICK UP DROP SERVICE
வடமராட்சி - யாழ்ப்பாணம் - கொழும்பு
வடமராட்சி - கொடிகாமம் - கொழும்பு
2800/=
(17484)
T.P: 077 544 8503

Architectural CAD Center
2D-Drawing
3D-Modeling
Isometric Drawing
Auto CAD
Personal & Group Classes
Jaffna- Kilinochchi-Vavuniya
Lecturer by Mr.K.N.Mugunthan(D/A)
Cert.in Auto CAD(2D&3D)
University of Peratheniya
Cert.in Advance 3D-Modeling in Auto CAD
University of Moratuwa
Link: 0775116320 - 071-8617972
(17852)

CANADA
VISITOR VISA
VISITOR VISA வில் கனடா
செல்வதற்குரிய ஆலோசனைகள்
மற்றும் Online விண்ணப்பங்கள்
விரைவாக செய்து தரப்படும்
CIMS COLLEGE
(C-7623)
0777-068-777
49A.சப்பல் லேன், யாழ்ப்பாணம்
V2 TRAVELS

VISA விண்ணப்பங்கள்
அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள், ஆலோசனைகள்
✓ ONLINE APPLICATIONS
✓ VISA APPOINTMENTS
✓ PASSPORT APPLICATION
✓ POLICE CLEARANCE
என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A.சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS
0777-068-777

## சர்வதேச...

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேலும் தெரிவிக்கையில்,

'இலங்கையில் தற்போதைய அரசின் செயற்பாடுகள் சந்தி சிரிக்கும் நிலைக்கு வந்துள்ளன. ஜனாதிபதி மீதும், அமைச்சர்கள் மீதும் நாட்டு மக்கள் மாத்திரமல்ல, சர்வதேசம் கூட நம்பிக்கை இழந்து வருகின்றது.

எனவே, உடனடியாக பாராளுமன்றத் தேர்தலையும், ஜனாதிபதித் தேர்தலையும் நடத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒத்துழைக்க வேண்டும் என இரா.சம்பந்தன் வலியுறுத்தினார்

இலங்கையில் தேசிய இனப்பிரச்சினையால் தமிழ் மக்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வந்துள்ளார்கள். இப்போதும் அவர்கள் பேரினவாத அடக்குமுறைக்குள் வாழ்ந்து வருகின்றார்கள். எனவே, தமிழ் மக்களுக்கு மிக விரைவில் தீர்வு கிடைக்க வேண்டும் என்றும், அதற்கான கருமங்கள் முன்னெடுக்கப்பட நாம் அனைவரும் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவோம் அரசியல் தீர்வு விடயத்தில் எமது நிலைப்பாட்டில் எந்த விட்டுக்கொடுப்புக்கும் இடமில்லை என்பதையும் கூறி வைக்க விரும்பு கின்றேன். புதிய அரசமைப்பு கட்டாயம் உருவாக்கப் பட வேண்டும். அதனூடாகவே தீர்வு காணப்பட வேண்டும்.

ஜனாதிபதி முக்கிய கருமங்களில் தான் நினைத்த மாதிரி பிடிவாதமாகச் செயற்படுகின்றார். அமைச்சர்களும் தாங்கள் நினைத்த மாதிரி வெவ்வேறு திசைகளில் பயணிக்கின்றார்கள். நாட்டு மக்கள் தொடர்பில் இவர்களுக்குத் துளியளவும் அக்கறை இல்லை. சுயலாப அரசியலே இவர்களின் நோக்கமாக உள்ளது. இது நாட்டின் முன்னேற்றத்துக்கு உகந்தது அல்ல. எதிர்க்கட்சிகளின் கோரிக்கைக்கமைய உடனடியாகத் தேசிய தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும். தளம்பல் இல்லாத நிலையான ஆட்சி வேண்டும் என்றும் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

(ந-7)

## வடமாகாண...

தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

யாழ். நதி நீர் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் பொறியியலாளர்கள் மற்றும் தொடர்புடைய நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படுவதாகவும் பாரம்பரியத்திற்கு ஏற்ப பிரச்சினையை கையாள்வது தொடர்பிலும் ஆலோசிக்கப்படுகின்றது.

தற்போதுள்ள 40,000 ஏரிகளை மேம்படுத்தவும் மழை நீரை சேமிக்கவும் கடலில் கலக்கும் நதி நீரை சேகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார். (7)

காணி விற்பனைக்கு உண்டு
GOLDEN Real Estate
யாழ்ப்பாணம் கைதடிச் சந்திக்கு அருகாமையில் A9 வீதி முகப்புடன் 40 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- நிலப்பரப்பு, நன்னீரூற்று
- வடமாகாண சபை, சித்த மருத்துவமனை ஆகியவற்றிற்கு எதிரே பிரதான வீதியுடனான காணி
- 18 அடி பாதை
- யாழ். பஸ் நிலையத்திலிருந்து 6 km தூரம்
- நல்லசூழல், குடியிருப்புகள் சூழவுள்ள காணிவீடு கட்டுவதற்கும், களஞ்சியசாலைகள் அமைப்பதற்கும் உகந்த இடம்
- பரம்பரைக்காணி, பல வருடகால தோம்பு, தூய உறுதி
- தரகர் தேவையில்லை.
- பார்வையிடும் நேரம் காலை 06.00 - மாலை 06.00 மணிவரை
(17856)
076 057 0354,
077 623 4204, 076 755 8606

விற்பனைக்கு
Lion பொமெறேனியன்
நாய்க் குட்டிகள்
விற்பனைக்கு
உண்டு.
(17841)
071 649 2654

வீரசிங்கம் மண்டபம் - யாழ்ப்பாணம்
இந்தியன் செலக்ஷன்
தீபாவளி
ஜவுளிக் கொண்டாட்டம்



இன்று மட்டும் 13.11.2023 (திங்கள்)
பட்டுச் சாறிகள், கொட்டன் சாறிகள், சல்வார்கள், சல்வார் துணிகள் மற்றும் டொப், பாட்டி புறொக், சேட், ரீ சேட், டெனிம் ஜீன்ஸ் மற்றும் சிறுவர்களுக்கான ஆடைத் தெரிவுகளையும் இன்னும் மங்கையர் மனங்கவரும் ஆடைத் தெரிவுகளையும் பெற்றுக்கொள்ளலாம்.
விஷேட விலைக்கழிவு
டொப் 500/=
ரெடிமேட் சல்வார் 750 /=
கையிருப்பு உள்ளவரை மட்டுமே
(17855)
இடம் : வீரசிங்கம் மண்டபம் - யாழ்ப்பாணம்
அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

பல ஆயிரம்
கடந்த பதிவுகள்
பல நூற்றுக்கு மேற்பட்ட திருமணங்களை
பொருத்திய சாதனைகள்
உங்கள்
கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவையை உலகின்
எப்பாகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ள
www.kalyanamalai.lk
இணையத்தளத்தைப் பாருங்கள்
பதிவுக்கட்டணம் ரூபாய் 4,000/=



தொடர்புகளுக்கு :-
கல்யாண மாலை
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
Email : kalyanamalai.jaffna@gmail.com

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.11.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org